T-UN-533

# பழைய கல்வெட்டுப்படி



பட்டிசரம் துர்க்கை அன்னை

ஆசிரியர்,

**N. சேதுராமன், B. Sc., D. M. I. T.**

தலைவர்,

தஞ்சை மாவட்ட வரலாற்றுப் பேரவை

தொல்பொருள் - வரலாற்று ஆராய்ச்சிக் கழகம்

**கும்பகோணம்.**

[வரலாற்றுப் பேரவைகளுக்கும், கல்லூரிகளுக்கும், சரித்திர சம்மந்தமான ஆராய்ச்சிக் கூடங்களுக்கும், நூலகங்களுக்கும் இந்நூல் இலவசமாக அளிக்கப்படுகிறது.]

1976-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கோவையிலும், திருச்சியிலும் நடைபெறும் வரலாற்றுக் கருத்தரங்கு மாநாடுகளில் இந்நூல் இலவசமாக அளிக்கப்படுகிறது

# முன்னுரை

—O—

நான் இளமையில் விஞ்ஞானமும் இரசாயனமும் பயின்றேன். பின்பு பொறியியல் பயிற்சி பெற்றேன். இப்போது மோட்டார், பஸ், லாரி, டிராக்டர் முதலிய வாகனங்களின் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளேன். சாப்பாட்டிற்கு இத்தொழிலே துணையாக உள்ளதால் இதனில் நன்றாக மாட்டிக்கொண்டேன்.

நிற்க, சில வருடங்களாக நான் பழமைப்பித்தனாக மாறலானேன். தொல் பொருட் சின்னங்கள், ஆலயங்கள், கல்வெட்டுக்கள் இவைகளைக் கண்டால் பித்தம் தலைக்கேறிவிடும். இந்நிலை இப்படியே நீடித்ததால் நான் இப்போது ஒரு முழுமையான கல்வெட்டுப் பைத்தியமாகவே மாறிவிட்டேன்.

ஏதோ முன் ஜென்ம புண்ணியத்தால் குருவருள் பெற்றேன். சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணமும் உருவாயிற்று. "பாழ்பட்ட ஆலயங்கள், கல்வெட்டுக்கள் என்று அலைந்து திரிவதால் பித்துப்பிடித்துப் போய்விடுவாய்" என்று நண்பர்களும் எச்சரித்தார்கள்.

பித்தம் தெளிய மருந்தும் உளதோ என்று கவலையுற்றேன். கும்பகோணத்திற்கு அருகில் பட்டிசரத்தில் கொலுவீற்றிருந்து அருள்பாலிக்கும் துர்க்கை அன்னையை வணங்கி நின்றேன்.

> "தாயே என் பித்தம் தெளிய மருந்து வேண்டும்
> அன்னையாகிய நீயே அதனைத் தந்து அருளவேண்டும்"

என்று வரமும் கேட்டேன்.

துர்க்கை அன்னையும் கூறலுற்றாள், "மகனே! உன் பித்தம் தெளிய மருந்து கிடையாது. உன் வாழ்நாள் முழுவதும் நீ இப்படியே பழமைப்பித்தனாக இருப்பாய். கல்வெட்டுக்களையும், சரித்திரங்களையும் ஆராய்ச்சி செய்யும் பணியில் ஈடுபடுவாயாக. எங்கெல்லாம் வரலாற்று ஆராய்ச்சி நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் நீ சேவை செய்வாயாக. உன் வாழ்க்கையின் ஒரு பகுதியை, தொல்பொருள், வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபடுத்து. தமிழகத்தின் வரலாறு, பழம்பொருட் சின்னங்களைப் பாதுகாத்தல், இவைகளைப் பற்றி வாய் ஓயாமல் நாத்தழும்பேற நவில்வாயாக. இதுவே யான் உனக்கு இடும் கட்டளையாகும்" என்று கூறி அன்னையும் மறைந்தனள்.

அட்டையை அலங்கரிக்கும் அன்னை, துர்க்கையின் கட்டளையை என்னால் மீறமுடியாது. வரலாற்றுத்துறைக்குப் பணிசெய்து கிடப்பதே இன்று நான் செய்யக்கூடியதாகும். பிறகு என்ன? அன்னையின் சித்தம் எனது பாக்கியம், அவ்வளவுதான்.

அக்காலத்து மன்னர்கள் ஆலயங்களில் கல்வெட்டுக்களை வெட்டிவைத்தார்கள். அக்கல்வெட்டுக்களே தமிழகத்தின் வரலாற்றை அறிந்துகொள்வதற்கு பெரிதும் துணை புரிகின்றன. சில சமயங்களில் ஒருசில கல்வெட்டுக்கள் சிதைந்து விடுவதும் உண்டு. அக்கால மன்னர்கள் சிதைந்த கல்வெட்டுக்களைப் படியெடுத்து மீண்டும் கல்லில் வெட்டுவார்கள். "பழைய கல்வெட்டுக்களைப் படியெடுத்து மீண்டும் கல்லில் வெட்டினேன்" என்றும் எழுதி வைத்தார்கள். புதிய கல்வெட்டுக்களை வெட்டும் காலத்தில், பழைய கல்வெட்டுக்களையும் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற முறையை பின்பற்றினர்கள். தங்கள் நாட்டின் எதிரிகளின் கல்வெட்டுக்களைகூடப் படியெடுத்து ஆலயத்தின் சுவர்களில் வெட்டிவைத்தார்கள். அவ்வாறு பழைய கல்வெட்டுக்களை மீண்டும் வெட்டும்போது, கல்வெட்டின் கடைசியில் "**பழைய கல்வெட்டுப்படி**" என்றும் எழுதிவைத்தார்கள். இப்பெயர் பொருத்தமாக உள்ளதால், இந்நூலுக்கும், "**பழைய கல்வெட்டுப்படி**" என்ற பெயரையே வைத்துவிட்டேன்.

"பழைய கல்வெட்டுப்படி" ஆராய்ந்து, அவசரத்தில் அள்ளித்தெளித்துள்ள கருத்துக்களை வரலாற்று உலகம் ஏற்குமாக.

கும்பகோணம்,
*1—12—1976.*

**N. சேதுராமன்,**
டைரக்டர்,
ராமன் & ராமன் பிரைவேட் லிமிடெட்.

# தீர்ப்பு அளியுங்கள்!

அன்று திருஆரூர் நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகளிலும் மாட மாளிகைகளிலும் மகர தோரணங்கள் அலங்கரித்தன. எங்கும் ஒரே ஆரவாரம். வீதிவிடங்கப் பெருமானின் ஆலயம் நோக்கி மக்கள் வெள்ளம் சென்றவண்ணம் இருந்தது. மார்கழி மாதத் திருவாதிரை விழா; சிவனுக்குரிய நாள்; இராசேந்திர சோழன் பிறந்த நாள் விழா; கங்கைகொண்ட சோழன் இராசேந்திரன் அரசுக்கட்டில் ஏறி பதிமூன்று வருடங்கள் உருண்டோடிவிட்டன. சோழர் கடற்படை கடாரத்தையும் ஸ்ரீ விஜயத்தையும் வென்று வெற்றிவாகை சூடிய நாள். சோழநாட்டு மக்களின் மகிழ்ச்சிக்குக் காரணமும் வேண்டுமோ? அதோ கடாரம் கொண்ட இராசேந்திரனும் வந்துவிட்டான். மதிமந்திரிகள், படைத் தளபதிகள், அரசியல் அதிகாரிகள் புடைசூழ வீதிவிடங்கப்பெருமானையும் வணங்குகிறான்.

"தென்னாடுடைய சிவனே போற்றி"
"எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

எங்கும் வேதவொலி; கீத ஒலி; ஓதுவார்கள் தேவாரத்திருமுறைகளைப் பாடியவண்ணம் பக்திக் கடலில் மூழ்கிவிட்டனர்; ஏனையவரையும் மூழ்க்கிவிட்டனர்.

கடாரத்தை வெற்றிகொண்ட நிகழ்ச்சியைப் பெருவிழாவாகக் கொண்டாடினான் இராசேந்திரன். மார்கழித் திருவாதிரை நாள் மன்னனின் பிறந்த நாள்; விழாக்கோலத்திற்கு வருணனை ஏது? புலவர்களுக்கும், வேதமோதுபவர்களுக்கும், ஓதுவார்களுக்கும் பரிசில்கள் வழங்குகிறான் மாமன்னன். அடுத்து ராஜ நாராயண மண்டபத்தில் பரவை நங்கையின் நடன நிகழ்ச்சி. அவள் கோயிலில் பணிபுரியும் தேவரடியார் கூட்டத்துப் பணிப்பெண்; இசையிலும் பரதத்திலும் ஈடு இணையற்றவள்; இச்சுந்தரியைப் படைத்தபிறகு பிரம்மனும் மற்றோர் அழகியை இதுநாள்வரைப் படைத்தானில்லை. பரவை நங்கை மாமன்னன் இராசேந்திரனின் அன்புக்காதலி. இப்பேரழகி நடனம் ஆடப்போகிறாள். கங்கையும் கடாரத்தையும் ஆட்டுவித்த ஒரு மன்னனையே ஆட்டுவிக்கப்போகிறாள்.

"ஜல்...ஜல்...ஜல்" நாட்டியம் ஆரம்பமாகிவிட்டது. அணுக்கியர் பரவை நங்கை ஆடுகிறாள்; இல்லை, இல்லை, ராஜ நாராயணமண்டபமே ஆடுகிறது. பரவையின் ஆடலுடன் இராசேந்திரனின் உள்ளமும் ஆடுகிறது; மக்கள் வெள்ளமும் ஆடுகிறது.

இராசேந்திரன் தன் அன்புக்காதலியை நேருக்குநேர் நோக்கினான். நான்கு கண்கள் சந்தித்தன. இரண்டு இதயங்கள் ஒன்றாயின. எவருக்குமே அடிபணியாத மாமன்னன் நங்கைப் பரவையிடம் மனதைப் பறிகொடுத்தான்; கொடுத்தது கொடுத்ததுதான்; தன் இறுதிநாள் வரை அவன் அதைத் திரும்பப் பெறவேயில்லை.

"பரவை நங்கையே! உன் இசையும், ஆடலும் என்னைப் பரவசமூட்டுகின்றன; உன் கலையைப் போற்றுகிறேன். உன் பாடலையும், ஆடலையும் பலமுறை கண்டு களித்துள்ளேன்; ஆனால் அதியற்புதமான ஆடலை இன்றுதான் கண்டேன். உன் கலை தெய்வாம்சம் பொருந்தியது" இராசேந்திரன் கூறலானான்.

"மாமன்னா; நான் பணிப்பெண்; தங்கள் முன்னிலையில் நிற்பதற்குக்கூட அருகதையற்ற ஓர் அபலை; தங்களின் அன்புக்குரியவளாகவும், தங்கள் முன் ஆடுவதற்கும் யான் என்ன புண்ணியம் செய்தேனோ அறியேன்; தாங்கள் என்னைப் புகழும் அளவிற்கு என்னிடம் கலையம்சம் அத்துணை பெருமை வாய்ந்தது என்பதும் அறியேன்! எனது ஆடலில் எங்காவது குறையிருந்தால் தயவுசெய்து என்னை மன்னியுங்கள்".

" நங்கைப் பரவையே! என் இதய ராணியே! நீ எழில் அரசிமட்டுமல்ல; இசையரசி நடன அரசி; உன் நடனத்தில் குறை கூறுவோரே குறையுள்ளவர்".

"சக்ரவர்த்திப் பெருமானே! தங்கள் திருமுகத்தான் இச்சொற்களைக் கேட்க இவ்வெளியாள் செய்த புண்ணியம்தான் என்ன? இசையும் ஆடல் கலையும் தாங்கள் அறியாததா? இராஜ பண்டிதரான இராசேந்திர சோழ மன்னன் அறியாத கலைகளும் உளவோ? பெருவீரராகிய மன்னர் பெருமானே! தங்களைச் சோழ நாட்டு மக்கள் பேரன்புடன் கங்கைகொண்டான் என்றும் கடாரம் கொண்டான் என்றும் அழைக்கின்றனர்.............."

"என் உள்ளம் கவர்ந்த நங்கையே; இன்றையலிருந்து எமக்குப் "பரவை கொண்டான்" என்ற பட்டத்தையும் சேர்த்துக்கொள்".

கங்கை கொண்ட சோழன், கடாரம் கொண்ட மன்னன் – இராசேந்திரனின் காதலி இதய ராணி நங்கைப் பரவை ஆகாயவீதியில் பறக்கலானாள்.

"மன்னா! நான் பணிப்பெண்! தங்களின் தூய்மையான அன்புக்காதலினால் என்னை ஆட்கொண்டுவிட்டீர்கள்; என்னையே என்னால் நம்ப முடியவில்லையே; தயவுசெய்து இவ்வேழையைச் சோதனை செய்யாதீர்கள்".

"பரவையே; பதினைந்து ஆண்டுகளுக்கு முன் உன்னை நான் என்று சந்தித்தேனோ அன்றையலிருந்து இன்றுவரை நான் உன்னிடம் கொண்டுள்ள களங்கமில்லாத அன்பை நீ நன்கு அறிவாய். இராசேந்திரன் என்றைக்குமே வாய்மை மாறாதவன் என்பதைக் காலப்போக்கிலும் அறிந்துகொள்வாய்".

அணுக்கியர் பரவை நங்கை – இராசேந்திர சோழன் இவர்களின் காதல் வாழ்க்கை ஒரு மகா காவியம். அரசு பாரம்பரியம் காரணமாக பரவையைப் பட்டமகிஷியாக ஏற்க முடியாது இருந்தாலும் அவளைத் தன் இதயராணியாக ஏற்றிவைத்தான் மாமன்னன் கங்கைகொண்ட சோழன். மன்னனிடத்து மாறாக்காதல் கொண்ட பரவை நங்கை ஈசன்பாலும் பக்தி மிகுந்து இருந்தாள். இராசேந்திரன் பரவை இவர்களின் காதல் வாழ்க்கை கண்டோர் வியக்கும் அளவில் இருந்தது. பொன்னும் பொருளும் வாரி வழங்கினான் மன்னன். பரவை நங்கை அத்துணையும் ஆலயங்களுக்கே அர்ப்பணித்தாள். மாமன்னனின் இச்சைக்குகந்த ஆசைக்கிழத்தி பரவை நங்கை சிவபெருமானிடத்துப் பக்திகொண்டவள்; மன்னன் தனக்கு வழங்கிய பொருள்கள் முழுவதையும் ஆலயத்திருப்பணிகளுக்கே அளித்தனள். மாமன்னனின் 16-ஆம் ஆட்சி ஆண்டின் காலம் (கி. பி. 1027) பரவை மன்னனிடத்துக் கூறலானாள்,

"தலைவா! இவ்வேழையின் விருப்பம் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். கிருபை கூர்ந்து அருள் உள்ளம் கொண்டு செவிமடுக்க வேண்டுகிறேன்."

"பரவையே! என் உளம் கவர்ந்த நங்கையே! உன் விருப்பத்தைக் கூறுவாய். மீண்டும் கங்கை நீர் வேண்டுமா? இல்லை, இலங்கை மன்னனின் மணியாரம் வேண்டுமா? அல்லது காம்போஜ நாட்டிலிருந்து தங்கத்தேர் வேண்டுமா? பரவை கேட்டது எதுவாயினும் இராசேந்திரன் உடன் கொணர்வான்".

"மன்னா! யான் பொன்னும் பொருளும் வேண்டேன். ஆரூரன் வீதிவிடங்கப் பெருமானின் கர்ப்ப இல்லத்தைப் பாருங்கள். செங்கல்லால் கட்டப்பட்டிருக்கும் இப்பகுதி சாசுவதமானது அல்ல, இப்பகுதியைக் கருங்கல்லால் கட்ட விரும்புகிறேன். நிரந்தரமான கற்றளி கட்ட கருணை கூர்ந்து அனுமதி தாருங்கள்".

இராசேந்திரனின் கண்களில் வடிந்த நீர் அவன் கொணர்ந்த கங்கைப் பிரவாகத்தையும் மீறியது. "பரவையே! நம் குல தெய்வமாம் சிவனார்க்குச் செய்யும் சேவை புனிதமானது. உன் எண்ணத்தை மெச்சுகிறேன். உன் திருப்பணி விரைவில் நடக்கும். நீ இடும் ஆணையை அதிகாரிகள் உடன் நிறைவேற்றி வைப்பர்."

செங்கல் தளியாக இருந்த வீதிவிடங்கப் பெருமானின் கர்ப்பக்கிரகத்தையும் அர்த்த மண்டபத்தையும் கற்றளியாக மாற்றினாள் பரவை நங்கை. இத் திருப்பணி இரண்டு வருடங்கள் நடைபெற்றன. பரவை திருப்பணியை மேலும் தொடர்ந்தாள். கி. பி. 1029 ஆவணியிலிருந்து மாசி மாதத்திற்குள் 161 நாட்களில் ஸ்ரீவிமானத்திற்கும் கர்ப்ப அறையின் சுவர்களுக்கும் பொன் வேய்ந்தாள். 26643 கழஞ்சு நிறையுள்ள பொன் தகடுகள் விமானத்தையும் சுற்றுச் சுவரினையும் அலங்கரித்தன.

"உடையார் வீதிவிடங்கத் தேவர் குடத்திலும் வாய்மடையிலும் நாலு நாசியிலும் உள் குடத்திலும்" பொன் வேய்ந்தாள் என்று கல்வெட்டும் பறை சாற்றுகிறது.

கர்ப்ப அறையின் கதவுகளுக்கும், மண்டபத் தூண்களுக்கும் 42000 பலம் எடையுள்ள செம்பினுல் தகடு சாத்தி அழகுபடுத்தினுள். 15579 பலம் எடையுள்ள பிரம்மாண்டமான 28 குத்துவிளக்குகளையும் தானமாக அளித்தாள். அது மட்டுமா? ஆயிரக்கணக்கான கழஞ்சு நிறையுள்ள பொன் ஆபரணங்களும், பாத்திரங்களும் அளித்தாள். ஆபரணங்களில் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டன. 428 முத்துக்கள்; 7 மாணிக்கக் கற்கள்; 36 வைரக் கற்கள்; எண்ணற்ற மரகதக் கற்கள்; வெள்ளிப் பாத்திரங்கள்; ஏராளம் ஏராளம்: பாவை விளக்குகள் இரண்டு; ஒன்றின் பெயர் பச்சைப்பாவை உமை நங்கை; மற்றொன்றின் பெயர் பாவை சரியாமுலை நங்கை. அன்னதானத்திற்காக பலவேலி நிலங்களும் தானமாகக் கொடுக்கப்பட்டன.

நல்லதோர் நாளில் குடமுழுக்கு விழா நடைபெற வேண்டுமல்லவா? மன்னனை அழைப்பித்தாள் பரவை. தெய்வபக்தி மிகுந்தவளும், தன் இச்சைக்குரியவளுமாகிய பரவையை உலகோர் வியக்குமாறு பெருமைப்படுத்தினுன் இராசேந்திரன். குடமுழுக்கு விழாவன்று (கி. பி. 1031) மன்னன் பரவையைத் தன் அருகில் வீற்றிருக்கச் செய்து தேரில் பவனி வந்தான். தேரில் பட்டத்து அரசியைத் தவிர வேறு எவருமே அமருதல் கூடாது என்ற மரபைக் களைந்தான்; சரிசமமாக, அப்பதவிக்கு நிகராக பரவையைப் பெருமைப்படுத்தினுன் இராசேந்திரன்.

அமரகாதலர் இருவரும் வீதிவிடங்கனைத் தரிசித்தனர். எவ்விடத்தில் பரவையுடன் நின்று இறைவனை தரிசித்தானோ அவ்விடத்திலேயே தங்கள் காதலின் ஞாபகமாக குத்துவிளக்கு ஒன்றினையும் வைத்தான் இராசேந்திரன்.

"உடையார் ஸ்ரீ ராசேந்திரசோழ தேவரும் அணுக்கியர் பரவை நங்கையாரும் நிற்குமிடந்தெரியும் குத்துவிளக்கொன்றும்" என்று கல்வெட்டும் கூறுகிறது.

பிற்காலத்தில் திருவாரூர் ஆலயத்திற்கு சோழ மன்னர்கள் பலரும் நிவந்தங்கள் அளித்துள்ளனர். அவைகளில் மிக அதிகமாக அளித்தவன் இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆவான். ஆனுல் கல்வெட்டுக்களின் கணக்குப்படிப் பார்த்தால் பரவை நங்கையின் நிவந்தங்கள் இரண்டாம் குலோத்துங்கனையும் மிஞ்சியுள்ளன

பரவை நங்கை சிதம்பரம் கோயிலுக்கும் பலவேலி நிலங்களைத் தானமாக அளித்தாள். இந்நிலங்களிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கும் 1225 கலம் நெல்லையும் அன்னதானம் செய்வதற்கு நிவந்தங்களையும் ஏற்படுத்தினுள்.

பரவை நங்கையின்பால் தான் கொண்ட காதலை அமர காவியமாக வடித்தான் இராசேந்திரன். அவள் பெயரால் பரவை ஈஸ்வரமுடையார் ஆலயம் என்னும் சிவன் கோயிலையும் எடுப்பித்தான். இன்றும் இக்கோயில் விழுப்புரத்திற்கு வடமேற்கில் பனையபுரம் என்ற ஊரில் உள்ளது.

காலத்தையும் காலனையும் யாரால் வெல்லமுடியும்? இராசேந்திரன் கி. பி. 1044-ல் இறந்தான். பரவை சிறகொடிந்த பறவையானுள். இராசேந்திரனின் மகன் இராஜாதி ராஜனிடம் சென்றுள்.

"இராஜாதி ராஜ! உன் தந்தை, என் அன்புக் கணவர் தெய்வமாகிவிட்டார். அவர் ஞாபகமாக திருவாரூர் ஆலயத்தில் சில திருப்பணிகள் செய்ய விருப்பமாயுள்ளேன். நான் பணிப்பெண், பட்டமகிஷியல்ல. ஆனுல் உன் தந்தையின் அன்புக்குப் பாத்திரமானவள்; தயை கூர்ந்து இப்பணியை மேற்கொள்ள எனக்கு அனுமதி அளிப்பாயாக".

இராஜாதி ராஜன் கூறலுற்றுன், "பரவைப் பெருமாட்டியே! தாங்கள் என் தாய்க்குச் சமமானவர்! அம்மா என்று ஆயிரம் முறைக் கூவி அழைக்கின்றேன். என்னைத் தங்கள் மகனுக ஏற்று உத்தரவிடுங்கள். என் தந்தையே இடும் கட்டளையாகக் கருதி தங்களின் விருப்பத்தை நிறைவேற்றுவேன்".

முதுமைப் பருவம் அடைந்த கிழவி பரவை நங்கை ஆனந்தம் மேலிட்டாள்.

"இராஜாதி ராஜ! என் தலைவரை இழந்த துக்கத்தை இன்று மறந்தேன். காரணம் புண்ணிய மகன் ஒருவனை உன் உருவில் பெற்றேன். உன் தந்தையைப் போல நீயும் சிவ தர்மங்கள் செய்வாயாக".

கிழவி பரவை பேரானந்தம் கொண்டாள். தன் காதலன் பெயரால் கி. பி. 1045 இல் ''இராஜேந்திர சோழன் திருமண்டபம்'' என்னும் மண்டபத்தைத் திருவாரூர் ஆலயத்தில் எடுப்பித்தாள். இம்மண்டபத்தை ஆண்டுதோறும் பராமரிக்க நிவந்தங்களும் ஏற்படுத்தினாள். இதற்குப் பின் அவள் வெகுநாள் வாழவில்லை. காதலனுக்குத் தன் நன்றிக் கடனை ஆற்றி விட்டோம் என்ற மனநிறைவுடன் ஆவி போக்கினாள்.

இராஜாதிராஜனும் பரவை நங்கையைத் தன் தாயாக பாவித்தான். திருவாரூர் ஆலயத்தில் தந்தைக்கும் பரவைக்கும் திருமேனிகளை எடுப்பித்தான். இத் திருமேனிகளுக்கு நாள்தோறும் வழிபாடுகள் செய்ய நிவந்தங்களும் ஏற்படுத்தினான். பரவைபுரத்தில் பரவையின் பெயரால் கட்டப்பட்ட பரவை ஈஸ்வரமுடையார் ஆலயத்திற்கும் நிவந்தங்கள் செய்வித்தான்.

கி. பி. 1055-இல் இராஜாதிராஜனும் போர்க்களத்தில் இறந்தான். இவனுடைய தம்பி இரண்டாம் இராஜேந்திரதேவன் அரசுக்கட்டில் ஏறினான்; தம்பியும் அண்ணனைப் பின்பற்றி தந்தைக்கும் பரவைப் பெருமாட்டிக்கும் திருமேனிகள் செய்வித்து அவைகளை பரவைபுரத்திலுள்ள பரவை ஈஸ்வரமுடையார் கோயிலில் (கி. பி. 1060-ல்) பிரதிஷ்டை செய்தான். இத்திருமேனிகளுக்கு நாள்தோறும் வழிபாட்டிற்காக நிவந்தங்களும் செய்து விழாக்களும் கொண்டாடினான்.

அன்று அனுக்கியர் பரவை நங்கையார் விழாவை முன்னிட்டு இரண்டாம் இராசேந்திர தேவன் இறைவன் முன் அமர்ந்து தன் தந்தையும், தந்தையின் காதலி பரவை நங்கையும் விண்ணுலகத்தில் இனிதேவாழ இறைவனை இறைஞ்சி நின்றான்.

மக்கள் பெருவெள்ளம் கரைபுரண்டோடியது. பரவை நங்கையின் விழாவல்லவா! அமரகாவியம்! காதலுக்கு ஒரு ஓவியம் – மக்கள் மகிழ்ச்சிதான் என்னே! ஒருவன் கூறலுற்றான், ''நண்பர்களே! பெரியதேவர் கங்கைகொண்ட மன்னர் இராசேந்திரரின் புகழ்தான் என்னே! பரவை நங்கை பட்டத்து மகிஷி இல்லை! அவள் பணிப்பெண்ணாக இருந்தும் பரவையின்பால் தான்கொண்ட காதலின் ஞாபகமாக இக்கோயிலை எடுப்பித்தார் இராசேந்திரர். அம்மாமன்னரை விட சிறந்தவர் எவருமில்லை''.

இரண்டாமவன் கூறுகிறான், ''உண்மைதான்; இதில் வியப்பு ஒன்றுமில்லை. இராசேந்திர தேவர் மனுநெறி அறநெறி வழியில் அரசு கோலோச்சியவர். ஆகவே அவர் புரிந்த செயல்கள் யாவுமே சிறப்புடையதுதான். ஆனால் பரவையின் வாழ்க்கையை நினைவு கூறுங்கள். அவள் ஆலயத்தில் பணிபுரிந்த தேவரடியார் கூட்டத்துப் பணிப்பெண். மன்னனின் காதலியாகத் திகழ்ந்தாலும் தெய்வபக்தியும் தர்மசிந்தனையும் உடையவளுமாக இருந்தாள். அப்பிராட்டியார் செய்த நிவந்தங்கள் தாம் எத்தனை? செம்பியன் மாதேவியாரைப் போன்று ஆனால் ஒரு பணிப் பெண் இதனைச் சாதித்தாள் என்றாள் பரவை நங்கையே சிறந்தவள் எனலாம்''.

மூன்றாமவன் கூறலானான், ''நண்பர்களே நீங்கள் கூறுவது சரிதான். ஆனால் பரவையைத் தன் தாயாக மதித்து தானும் அவளுக்கு ஒரு மகனாக இருந்து, அப்பெருமாட்டிக்குத் திருவாரூரில் திருமேனி எடுப்பித்தாரே இராஜாதிராஜர்; அவரே சிறந்தவர். பணிப்பெண்ணாக இருந்தும் தன் தந்தையின் அன்புக்குரியவள் என்ற காரணத்தால் பரவையைத் தாயாக வழிபட்ட இராஜாதிராஜரைவிட சிறந்தவர் வேறு எவர் உளர்?''

நான்காமவன் கூறுகிறான், ''தோழர்களே, நீங்கள் ஒன்றை மறந்துவிட்டீர்கள். இப்போது இரண்டாம் இராசேந்திரதேவர் ஆட்சிபுரிகின்றார். நம் மன்னரும் தன் அண்ணனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி பரவை நங்கையார் மறைந்து பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகும்கூட இப்பரவைபுரத்தில், அப்பெருமாட்டிக்குத் திருமேனி எடுப்பித்துள்ளாரே? இவரன்றோ சிறந்தவர்!''.

இந்நால்வரின் வாக்குவாதம் பெருவழக்காயிற்று. முதலாமவன் கூறலானான், ''தோழர்களே, நம் வழக்கிற்கு ஒரு முடிவுகாணவேண்டும். அதோ அந்த வில்வ மரத்தடியில் தாடியுடனும் கமண்டலத்துடனும் ஒரு மகான் அமர்ந்துள்ளார். அவரிடம் சென்று நம் வழக்கினைக் கூறி நல்லதோர் தீர்ப்பைக் காண்போம்''.

நால்வரும் பெரியவரைத் தரிசித்து தங்கள் வாதங்களை எடுத்துரைத்தனர். ''மாமுனிவரே, இவ்வழக்கிற்கு நல்லதோர் தீர்ப்பினைத் தாங்கள்தான் வழங்கவேண்டும்'' என்று அவர் தாள் பணிந்தனர்.

புன்னகை மலர முனிவரும் கூறலுற்றார், "சோழநாட்டு மக்களே! நான் கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள். சோழமன்னர்களிலும், குடிமக்களிலும் எவர் சிறந்தவர் என்று கூறுவது கடினம். யாவருமே அறநெறிச்செல்வர்கள்தான். எப்பணியில் எவரெவர் சிறந்தவர் என்பதைப் பிற்காலச் சந்ததியினர்தான் கூறமுடியும். யாம் சோதிடம் அறிந்தோம். வருங்காலத்தில் யாது நடக்கும் என்பதை அறிவோம். இன்றையலிருந்து தொள்ளாயிரம் வருடங்களுக்குப் பிறகு சேதுராமன் என்று ஒருவன் பிறப்பான். அவன் கல்வெட்டுப் பைத்தியமாக ஊர் ஊராக அலைந்து திரிவான். சோழ மன்னர்களின் கல்வெட்டுக்களை ஆய்ந்து பரவை நங்கையின் சரித்திரத்தை வரலாற்றுப் பேரவையின் முன் எடுத்துரைப்பான். இவ்வுண்மை வரலாற்றை அறியும் வரலாற்றுப் பேரவையின் அங்கத்தினர்களே இவ்வழக்கிற்கு நல்லதோர் தீர்ப்பு வழங்குவர்!"

"மாமுனிவரே! தாங்கள் யார்? வருங்காலத்தைப் பற்றித் தெளிவாக எடுத்துரைக்கும் திறன்படைத்தத் தங்களை யாங்கள் அறிந்துகொள்ளவும் இயலுமோ."

"சோழநாட்டு மக்களே! எம்மைத் தெரியவில்லையா? யாம் திருவாரூரில் குடியிருப்பவன்! புற்றிடங்கொண்டவன் என்றும், வீதிவிடங்கன் என்றும் என்னை மக்கள் அழைப்பர்" என்று கூறி மாமுனியும் மறைந்தார்.

சோழமன்னர்கள் இன்று இல்லை. அவர்கள் கட்டுவித்த ஆலயங்களும் வெட்டுவித்தக் கல்வெட்டுக்களும் இன்றும் இந்நிலவுலகில் அழியாச் சின்னங்களாக விளங்குகின்றன. கல்வெட்டுச் சான்றுகளுடன் கூடிய உண்மை வரலாற்றை உங்கள் முன் வைத்துவிட்டேன். தீர்ப்பு அளிப்பதையும் உங்களிடம் விட்டுவிட்டேன். உங்கள் சித்தம் எனது பாக்கியம்.



**முதலாம் இராசேந்திர சோழனின் இலச்சினை**

(நன்றி – மத்திய அரசு தொல்பொருள் துறை)

---

**ஆதாரம் :–** திருவாரூர், சிதம்பரம், பனையபுரம் ஆலயங்களில் உள்ள முதல் இராசேந்திரன், முதல் இராஜாதி ராஜன், இரண்டாம் இராஜேந்திர தேவன் ஆகியோரின் கல்வெட்டுக்கள், 679/1919 ; 680/1919 ; 670/1919 ; 317/1917 ; 118/1888 ; 320/1917. புனைந்துரைக்கு மிடத்துச் சொந்தச் சரக்கும் உண்டு.

# வேதவனமுடையான்

ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மேன்மலைப் பழையனூர் நாட்டுப் பழையனூர் உடையான் வேதவனமுடையான் அம்மையப்பரான பல்லவராஜன்—பன்னிரண்டாம் நூற்றாண்டில் சோழ சாம்ராஜ்யத்தில் திறமை வாய்ந்த அரசியல் அதிகாரியாகப் பணிபுரிந்தவன் இப்பல்லவராஜன். பழையனூர் உடையான், ராஜராஜப் பல்லவரையன், வேதவனமுடையான், அம்மையப்பன், அண்ணன் பல்லவரையன் என்னும் பெயர்களும் இவனுக்கு வழங்கிவந்தன.

வேதவனமுடையான் திருவாலங்காட்டை அடுத்த பழையனூரில் பிறந்தவன். "பழையனூர் நீலி" என்னும் காளியின் தலமும் இவ்வூரையேக் குறிக்கின்றது. இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய மூன்று சோழ மன்னர்களின் காலங்களில் வேதவனமுடையான் பணிபுரிந்தவன். இம்மன்னர்களின் காலங்கள் வருமாறு :

1. இரண்டாம் இராஜராஜன் — கி. பி. 1146 – 1172
2. இரண்டாம் இராஜாதிராஜன் — கி. பி. 1166 – 1180
3. மூன்றாம் குலோத்துங்கன் — கி. பி. 1178 – 1217

இரண்டாம் இராஜராஜனின் அவைக்களத்தில் முதன் மந்திரியாகவும், படைத் தளபதியாகவும், அரசியல் மற்றும் சோழர்களின் குடும்ப விவகாரங்களில் அறிவுரைகள் கூறும் மந்திரியாகவும் பணிபுரிந்தவன் திருச்சிற்றம்பலமுடையானான பெருமான் நம்பிப் பல்லவரையன் என்பவனாவான். வேதவனமுடையான் பெருமான் நம்பிப் பல்லவரையனின் கீழ் சேனைத் தளபதியாகப் பணிபுரிந்தான்.[1]

இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தில் வேதவனமுடையானும் அரசியல் விவகாரங்களில் பெருமான் நம்பிப் பல்லவரையன் போன்று பெரிதும் நம்பிக்கைக்குரிய அரசியல் அதிகாரியாகத் திகழ்ந்தான்[2].

திருக்கடையூரில் இரண்டாம் இராஜராஜனின் 18-ஆம் ஆட்சியாண்டிற்குரிய (கி. பி. 1163—1164) கல்வெட்டில் வேதவனமுடையான் அளித்த நிவந்தங்கள் கூறப்படுகின்றன. இவ்வூரின் அருகே மணல்மேடு ஒன்று இருந்தது. இம்மேட்டை அழித்து விளை நிலங்களாக மாற்றி, அந்நிலங்களைத் திருக்கடையூர் ஆலயத்திற்கு அளித்தார்கள். அத்துடன் ஆலயத்திற்கு விளக்குகளும் தானமாகக் கொடுக்கப்பட்டன. இந்நிவந்தங்களை அளித்தவர்களில் வேதவனமுடையானும் ஒருவன் என்று இக்கல்வெட்டும் பகர்கின்றது[3].

இரண்டாம் இராஜராஜன் நோய்வாய்ப் பட்டான். அவனது இருமக்களும் சிறுவர்களாக இருந்தனர். ஆகவே, மதிமந்திரி பெருமான் நம்பிப்பல்லவரையனின் ஆலோசனைப்படி, இராஜராஜன் தன்னுடைய சகோதரி நெறியுடைப் பெருமா என்பவளின் மகனை எதிரிலிப் பெருமாளுக்கு கி. பி. 1166 ஜனவரியில் முடிசூட்டிவைத்தான்[4]. எதிரிலிப் பெருமாளுக்கு இரண்டாம் இராஜாதிராஜன் என்ற அபிஷேக நாமமும் அளித்தனன். கி. பி. 1166லிருந்து மாமன்னன் இராஜராஜனுடன் இரண்டாம் இராஜாதிராஜனும் அரசுபுரியத் தொடங்கினான். இராஜராஜன், இராஜாதிராஜனிடத்து மேலும் ஒரு ஆணையையும் விதித்தான். அதாவது இராஜராஜன் இறந்துவிட்டால் இராஜாதிராஜனே தொடர்ந்து இராஜ்யத்தை ஆளவேண்டும்; உரிய பருவம் வந்தவுடன் இராஜராஜனின் மக்கள் ஒருவனிடத்து சோழராஜ்யத்தின் அரசாட்சிப் பொறுப்பினை இராஜாதிராஜன் அளித்துவிடவேண்டும் என்பதேயாகும். (அம்மக்களில் ஒருவனே கி. பி. 1178 இல் முடிசூடிய மூன்றாம் குலோத்துங்கனாவான்).

இராஜராஜன், இராஜாதிராஜன் இவர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழக அரசியலில் குழப்பமொன்று நிலவியது. அப்போது பாண்டிய மன்னர்கள் இருவரிடையே வாரிசுப் போர்கள் தீவிரமாக நிலவின. மதுரையைத் தலைநகராகக் கொண்ட குலசேகரன், தன்னுடன் போட்டியிட்ட பராக்கிரம பாண்டியனைப் போரில் வென்றான். தவிரவும் இப்போரில் பராக்கிரம பாண்டியனும் இறந்தான். ஆகவே, பராக்கிரம பாண்டினின் மகன் வீரபாண்டியன் சிங்களவர்களின் துணையை நாடினான்.

சிங்கள மன்னன் பராக்கிரமபாகு வீரபாண்டியனுக்குத் துணையாகப் பெரும் படையொன்றை பாண்டிய நாட்டின் மீது ஏவினன். இலங்காபுரி தண்டநாயகன், ஜகத்தரயன் ஆகிய இரு சிங்களப் படைத்தளபதிகள் வீரபாண்டியனுக்குத் துணையாகக் குலசேகரனுடன் போரிட்டனர். இப்போரில் குலசேகரன் தோல்வியுற்று மதுரையை விட்டு ஓடிவிட்டான். இலங்கைப் படைத் தளபதிகள் வீரபாண்டியனை மதுரை மன்னன் ஆக்கினர்.

மதுரையை விட்டு ஓடிய குலசேகரன் சோழர்களிடம் தஞ்சம் புகுந்தான். பாண்டிய நாட்டை சிங்களவர்களிடமிருந்து மீட்டு, மீண்டும் குலசேகரனை மதுரையில் அரியணையில் ஏற்றும் பொறுப்பை மாமன்னன் இராஜராஜன், இராஜாதிராஜனிடம் ஒப்படைத்தான்.

இராஜாதிராஜனின் ஆணையின் கீழ் பெருமான் நம்பிப் பல்லவரையன், பெரும் படையுடன் மதுரையை நோக்கி விரைந்தான். கடுமையான போருக்குப் பின் சோழர் படை வெற்றிவாகை சூடியது. சிங்களப் படை விரட்டப்பட்டது. பெருமான் நம்பிப் பல்லவரையன் சிங்களப் படைத் தளபதிகளான இலங்காபுரி தண்டநாயகனையும், ஜகத்தரயனையும் போரில் கொன்று, இவர்களின் தலைகளை மதுரைக் கோட்டைவாயிலில் தைப்பித்தான். வீரபாண்டியனை மதுரையை விட்டு ஓடும்படிச் செய்து, குலசேகரனை மீண்டும் பாண்டிய மன்னனுக்கினன். (கி. பி. 1169) இப்படையெடுப்பில் பெருமான் நம்பிப் பல்லவரையனுடன் வேதவனமுடையான் அம்மையப்பனும் பெரும் பங்குகொண்டான்[5].

கி. பி. 1172 இல் இரண்டாம் இராஜராஜன் இறைவன் திருவடி அடைந்தான். கி. பி. 1173 இல் பெருமான் நம்பிப் பல்லவரையனும் இறந்தான்.

வேதவனமுடையான் மறைந்த பெருமான் நம்பிப் பல்லவரையனிடத்துப் பெரும் பற்றுக் கொண்டவன். ஆகவே, பெருமான் நம்பிப் பல்லவரையனின் குடும்பத்தாருக்கு நிலங்களைத் தானமாக அளிக்க இராஜாதிராஜனிடத்து ஆலோசனைக் கூறினன். வேதவனமுடையானின் அறிவுரைப்படி இராஜாதிராஜனும் மறைந்த பல்லவரையனின் குடும்பத்தாருக்கு 40 வேலி நிலங்களைத் தானமாக அளித்தனன்[6]. (இதன் விவரங்களைப் பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டில் காணலாம்.)

சிங்கள மன்னன் பராக்கிரமபாகு முன்னர் தம் படைகள் சோழர்களால் தோற்கடிக்கப் பட்டதை நினைவில் கொண்டு வஞ்சம் தீர்க்க திட்டமிடலானன். சோழ நாட்டின் மீது படையெடுக்க இரகசியமாகக் கப்பல் படையையும் விஸ்தரிக்கலானன். இதனை இராஜாதிராஜன் ஒற்றர்கள் மூலம் அறிந்தான். இப்படையெடுப்பை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடும் பணியை வேதவனமுடையானிடம் ஒப்படைத்தான்.

வேதவனமுடையானும் இரகசியமாக சூழ்ச்சியில் இறங்கினன். சிங்களத்தில் பராக்கிரமபாகுவுடன் வாரிசுப் போரிட்ட ஸ்ரீவல்லபனை தன் பக்கம் சேர்த்துக்கொண்டான். மின்னல் வேகத்தில் திடீரென்று சோழர் கடற்படையை சிங்களம் நோக்கிச் செலுத்தினன். இக் கடற்படைக்குத் தானே தலைமையும் தாங்கிச் சென்ருன். எதிர்பாராத இப் படையெடுப்பால் இலங்கை மன்னன் அதிர்ச்சியுற்ருன். வேதவனமுடையான் இலங்கையின் முக்கிய கடற்படைத் தளங்களையும், படை வீடுகளையும் நிர்மூலமாக்கினன், சிங்களவர்களின் படைகளை அந்நாட்டிலேயே அழித்தான்; இலங்கையின வடபகுதி முழுவதையும் தீக்கிரையாக்கினன். வெற்றிவாகை சூடிய வேதவனமுடையான் இலங்கையிலிருந்து கொணர்ந்த விலையுயர்ந்த பொருள்களை இராஜாதிராஜனுக்குக் காணிக்கையாக்கினன்.

அதிர்ச்சியடைந்த இலங்கை மன்னன் பராக்கிரமபாகுவும் வாளாயிருக்கவில்லை. பாண்டிய மன்னன் குலசேகரனுடன் தொடர்புகொண்டான். குலசேகரனும் தனக்கு முன்னர் சோழர்கள் செய்த உதவியை மறந்தான். செய்நன்றி மறந்த குலசேகர பாண்டியன் பராக்கிரமபாகுவுடன் சேர்ந்துகொண்டான். இதனை அறிந்த இராஜாதிராஜன் மீண்டும் வேதவனமுடையானை மதுரை நோக்கி அனுப்பினன். முன்னர் கடற்படைத் தளபதியாகப் பணிபுரிந்த வேதவன-முடையான், இப்போது தரைப்படைத் தளபதியானன். பாண்டிய நாட்டின்மீது புலியெனப் பாய்ந்தான். சிங்களப்படைகளைக் கொன்ருெழித்தான். குலசேகரனை மதுரையை விட்டு விரட்டினன். முன்னர் மதுரையைவிட்டு ஓடிய வீரபாண்டியனை மீண்டும் பாண்டிய மன்னனுக்கினன். (கி. பி. 1175).

இவ்வெற்றியின் காரணமாக இராஜாதிராஜன் ''ஈழமும், மதுரையும் கொண்டருளியவன் என்று அழைக்கப்பட்டான். வீரசாகசங்கள் புரிந்த வேதவனமுடையானுக்குப் பத்துவேலி நிலங்களைத் தானமாக அளித்தான்; மேலும் வேதவனமுடையானின் வீரத்தைப் புகழ்ந்து சாசனங்களிலும் வடித்தான். இக்கல்வெட்டுக்களை இன்றும் திருவாலங்காடு, திருமயானம் சிவன் கோயில்களில் காணலாம்[7].

கி. பி. 1178இல் மறைந்த மாமன்னன் இராஜராஜனின் மக்களில் ஒருவனாகிய குலோத்துங்கன் முடிசூடினான். இராஜாதிராஜன் இரண்டு வருடங்கள் குலோத்துங்கனுடன் இணைந்து ஆட்சிபுரிந்தபின் கி. பி. 1180இல் ஆந்திரம் சென்றான். ஆந்திராவில் இராஜாதிராஜன் சிவதர்மங்களில் ஈடுபட்டு கி. பி. 1215இல் இறைவன் திருவடி அடைந்தான்.

மூன்றாம் குலோத்துங்கன் மறைந்த மாமன்னன் இராஜராஜனின் மகனாவன். சோழ சாம்ராஜ்யத்தை 40 வருடங்கள் பெரும் புகழுடன் அரசுபுரிந்தவன். இவனது ஆட்சிக் காலம் ஒரு பொற்காலமாகும்.

குலோத்துங்கனும் வேதவனமுடையானிடத்து மிகுந்த மரியாதையும் விசுவாசமும் கொண்டிருந்தான் என்பதைக் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியலாம். தன் தந்தையின் காலத்தும், அத்தை மகன் இராஜாதிராஜன் காலத்தும், சோழ சாம்ராஜ்யத்திற்கும் அரச பரம்பரைக்கும் அரும்பணியாற்றிய வேதவனமுடையானை குலோத்துங்கன் தனக்கு அறிவுரையும், அறவுரையும் கூறும் முதியவராகப் போற்றினான். மூன்றாம் குலோத்துங்கன் கி. பி. 1185லும், 1186லும் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்று வென்று வந்தவன். இப்போரில் வேதவன-முடையான் பங்குகொண்டவனாகக் கல்வெட்டுச் சான்றுகள் இல்லை. ஆனால் வேதவனமுடையான் கி. பி. 1192 வரை உயிருடன் இருந்தவன் என்பது கல்வெட்டுக்களினால் அறியப்படுவதால், முதுமைப்பருவம் அடைந்த வேதவனமுடையான் அரசியலிலும், போர்முறைகளிலும் குலோத்துங்கனுக்கு அறிவுரைக் கூறும் ''வயது முதிர்ந்த பெரியவராகவே'' இருந்திருப்பான் என்பது திண்ணம். குலோத்துங்கனது கல்வெட்டுக்களில் வேதவனமுடையான் ''பல்லவராஜர்'' என்று அழைக்கப்படுவதிலிருந்து குலோத்துங்கன் வேதவனமுடையான்பால் கொண்டிருந்த அன்பையும் மிகுந்த மரியாதையையும் நன்கு அறியலாம். தன் தந்தையார் காலத்திலிருந்து பணிபுரிந்த வேதவனமுடையானை ''ராஜராஜப் பல்லவராஜர்'' என்றும், ''ராஜராஜ விழுப்பரையர்'' என்றும் போற்றிப் புகழ்ந்தான்.

திருக்கோடிக்காவல் கல்வெட்டு குலோத்துங்கனின் நான்காம் ஆட்சியாண்டிற்குரியது[8]. கோயிலின் தேவதான நிலங்களைப் பாதிக்கும் அளவிற்கு வெட்டப்பட்ட வாய்க்காலைத் தூர்த்து கோயிலுக்கே அந்நிலங்களை விடவேண்டும் என்று பல்லவராஜர் விண்ணப்பித்தபடி ஆணையிடப் பட்டது என்று இக்கல்வெட்டில் கூறுகிறான் குலோத்துங்கன்.

கோவந்தப்புத்தூரில் குலோத்துங்கனின் 16-ஆம் ஆட்சியாண்டுச் சாசனம் ஒன்று உள்ளது[9]. இதன் காலம் கி. பி. 1193–94 ஆகும். இதில் கூறப்படும் செய்தியாவது: ''முன்னர் இராஜாதிராஜ தேவரின் 7-ஆம் ஆட்சியாண்டுக் காலத்தில் பாக்கு மரத் தோட்டங் களும், பணமும் கோயிலுக்குத் தானமாக விடப்பட்டிருந்தன. இதனை முன்னர் பழையனூர் பல்லவராயர் ஏற்பாடுகள் செய்திருந்தார். ஆனால் கோயில் அதிகாரி இதனைத் தவறுதலாக உபயோகப்படுத்தியதால், அதிகாரியின் நிலங்கள் பறிக்கப்பட்டு அதிகாரியும் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். முன்னர் பல்லவராயர் செய்தபடியே மீண்டும் தேவதானமாக நிலங்கள் கொடுக்கப் பட்டன'', என்று குலோத்துங்கன் கூறுவதனால், வேதவனமுடையனால் ஏற்படுத்தப்பட்டப் பழைய தர்மங்களைக் குலோத்துங்கன் எத்துணை அளவுக்குப் போற்றிப் பாதுகாத்தான் என்பதும் விளங்கும்.

வேதவனமுடையான் சிறந்த சிவபக்தன். ஆலயங்களுக்கு நிலங்களையும், விளக்குகளையும் தானமாக அளித்தான். இவனால் செய்யப்பட்ட தர்மங்கள் வருமாறு:–

## வேதவனமுடையானின் நிவந்தங்கள்

| சாசன எண் | மன்னன் | ஆட்சி ஆண்டு | காலம் | ஊர் | தான விவரம் |
|---|---|---|---|---|---|
| 32/1906 | இராஜராஜன் II | 18 | 1164 | திருக்கடையூர் | விளக்கு, நிலங்கள். |
| 538/1904 | இராஜாதிராஜன் II | 2 | 1167 | திருவாரூர் | மூலஸ்தானமுடையார் கோயிலுக்கு நிலங்கள் தானம். |
| 543/1904 | இராஜாதிராஜன் II | 5 | 1170 | திருவாரூர் | வேதவனமுடையான் சொன்ன படிக்கு அரசனின் நிவந்தங்கள். |
| 189/1929 | இராஜாதிராஜன் II | 7 | 1172 | கோவந்தப்புத்தூர் | வேதவனமுடையான் கூறியபடி இராஜாதிராஜன் தேவதான நிலங்கள் அளித்தல். |
| 433/1924 | இராஜாதிராஜன் II | 8 | 1173 | பல்லவராயன்பேட்டை | வேதவனமுடையானின் அறிவுரைப் படி, இராஜாதிராஜன், பெருமான் நம்பிப் பல்லவரையனின் குடும்பத் தார்க்கு நிலங்களைத் தானமாக அளித்தான். |
| 542/1904 | இராஜாதிராஜன் II | 9 | 1174 | திருவாரூா | கோயிலுக்கு நிலதானம். |
| 540/1904 | இராஜாதிராஜன் II | 11 | 1176 | திருவாரூர் | கோயிலுக்கு நிலதானம். |
| 474/1905 | இராஜாதிராஜன் II | 12 | 1177 | வடதிருவாலங்காடு | விளக்கு தானம். |
| 45/1931 | குலோத்துங்கன் III | 4 | 1182 | திருக்கோடிக்காவல் | வேதவனமுடையான் சொன்னபடி குலோத்துங்கன் அளித்த நிவந்தங்கள். |
| 537/1904 | குலோத்துங்கன் III | 8 | 1185 | திருவாரூர் | மூலஸ்தானமுடையாருக்கும், வீதி விடங்கப்பெருமானுக்கும், அம்மன் கோயிலுக்கும் நுந்தாவிளக்கு எரிக்க நிலதானம். |
| 259/1925 | குலோத்துங்கன் III | 9 | 1186 | திருமயானம் | நிலதானம். |

குலோத்துங்கனின் 14-ம் ஆட்சியாண்டிற்குரிய சாசனம் ஒன்று சீகாழியில் உள்ளது. இதன் காலம் 1192 ஆகும். இதில் கூறப்படும் செய்தியிலிருந்து வேதவனமுடையானின் குடும்பத்தைப் பற்றி சில விவரங்களை அறிகிறோம். (S. I. I. Vol. V. No. 989).

வேதவனமுடையானின் மனைவியின் பெயர் எதிரிலாப் பெருமாள் என்பதாகும். இவள் நடுவில நாடான இராஜராஜ வளநாட்டு ஆங்கூர் குன்றங்கிழான் ஜெனநாதகற்பகம் அரையனின் மகளாவாள். வேதவனமுடையானின் மகளின் பெயர் உமையாழ்வி என்பதாகும். இவள் சுத்தமல்லி வளநாட்டு வெண்ணிக்கூற்றத்துப் பெருமுடையானை மணந்தவள். தாயும், மகளும் தம் கணவன்மார்களின் உடல் நலம்பெற வேண்டி கோயிலுக்கு நிவந்தங்கள் செய்தனர் என்று சீகாழிக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. ஆகவே, வேதவனமுடையான் முதுமைப் பருவத்தில் கி. பி. 1192-க்குப்பின் இறைவன் திருவடி எய்தியிருக்கலாம் என்று கொள்ளலாம். வேதவனமுடையானின் தம்பி அமரகோன் என்பவனும் இராஜாதிராஜன், குலோத்துங்கன் ஆகியோரின் ஆட்சிகாலங்களில் அரசியல் அதிகாரியாகப் பணிபுரிந்தவன் என்று கல்வெட்டுக்கள் வாயிலாக அறியப்படுகிறது.

தொடர்ந்து மூன்று சோழ மாமன்னர்களுக்குப் பணிபுரிந்தவனும், அன்னிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்று வெற்றிவாகை சூடியவனும், கடற்படைக்குத் தளபதியாகவும், தரைப் படைக்குத் தளபதியாகவும், மதிமந்திரியாகவும் விளங்கியவனும், சிவபக்திகொண்டவனும், ஆலயங்களுக்குத் திருப்பணிகள் பல புரிந்தவனும் ஆகிய **வேதவனமுடையான் அம்மையப்பனின்** பெயர் என்றும் இந்நிலவுலகில் நிலவுகின்ற வகையில், திருவாரூர் அருகில் "**அம்மையப்பன்**" என்னும் கிராமம் இன்றும் இவன் பெயர் தாங்கிக் காட்சியளிக்கின்றது [10].

**கல்வெட்டுச் சான்றுகள் :-**

1,2/465 of 1905 ; 3) 32 of 1906 ; 4) 433 of 1924 ; 5) 20 of 1899 ; 433 of 1924, 465 of 1905 ; 6) 433 of 1924 ; 7) 465 of 1905 ; 261 of 1925 ; 8) 45 of 1931 ; 9) 189 of 1929 10) S. I. I. Vol. 17 No. 587.

# மூன்று பள்ளிப்படைக் கோயில்கள்

ஆந்திர மாகாணத்தில், கிருஷ்ணு ஜில்லாவில் கைக்காலூர் தாலூகாவில் கலிதிமதி (Kalidimadi) என்னும் கிராமம் உள்ளது. 1938-ஆம் வருடம் விவசாயி ஒருவர் தன்னுடைய நிலங்களை அகழ்ந்து கொண்டிருந்தபோது, சில செப்புப்பட்டயங்களைக் கண்டு எடுத்தார். இப்பட்டயங்களைத் திரு. N. வெங்கட்டரமண அய்யா அவர்கள் ஆய்ந்து, இதன் விவரங்களை Epigraphia Indica தொகுதி 29-இல் பக்கம் 57-இல் வெளியிட்டுள்ளார்கள்.

இச்செப்பேடுகள், (C. P. No. 5 – 1937-38) கீழைச்சாளுக்கிய மன்னனை முதல் இராஜராஜனால் வழங்கப்பட்டவை. வடமொழியில் செலுங்கு எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. இச்செப்பேடுகள் கி. பி. 1037-க்கு முன் வழங்கப்பட்டன. இப்பட்டயங்களில் கூறப்படும் செய்திகள் தமிழக வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றன.

இச்செய்திகளின் சுருக்கம் வருமாறு :

1. தஞ்சைச் சோழன் முதலாம் இராஜராஜனின் மகள் குந்தவை, கீழைச்சாளுக்கிய மன்னனை விமலாதித்யனை மணந்தாள். குந்தவையின் மகனை கீழைச்சாளுக்கிய முதல் இராஜராஜனே, இப்பட்டயங்களை வழங்கினன்.

2. சோழ மன்னன் இராஜராஜனின் மகன் முதலாம் இராசேந்திரனவான். இவன் கங்கை வரை வென்று வந்தவன். இவன் கீழைச்சாளுக்கிய இராஜராஜனுக்கு மாமன் முறையினன் ஆவன்.

3. கீழைச்சாளுக்கிய இராஜராஜன், தன் மாமன் இராசேந்திரசோழனின் மகளான "அம்மங்கையை" மணந்தான்.

4. இவ்வாறு இருக்க, மேலைச்சாளுக்கியர்கள் கீழைச்சாளுக்கியருக்குச் சொந்தமான விஜயவாடையின் மீது படையெடுத்தார்கள். இப்படையெடுப்பைத் தகர்த்தெறிய, இராசேந்திர சோழன் தனது படைகளை கீழைச்சாளுக்கிய இராஜராஜனுக்குத் துணையாக அனுப்பினன். (இராஜராஜன் இராசேந்திர சோழனுக்கு மருமகன், மாப்பிள்ளை முறையாவான் என்பதும் நோக்கத்தக்கது.)

5. சோழர்களின் படைகளை மூன்று தளபதிகள் தலைமைத் தாங்கிச் சென்றூர்கள். இப்போரில் சோழர்படை விஜயவாடையை மேலைச்சாளுக்கியர் வசம் சிக்காமல் காப்பாற்றியது.

6. போர் மிகக் கடுமையாக நடந்தது. இருதரப்பிலும் ஏராளமானவர் உயிரிழந்தனர். சோழர்களின் மூன்று படைத் தளபதிகளும் போர்க்களத்திலேயே இறந்தனர்.

7. கீழைச்சாளுக்கிய இராஜராஜன், இம்மூன்று சோழர் படைத்தளபதிகளின் நினைவாக, மூன்று சிவாலயங்களைக் கட்டினன்.

8. சோழர்களின் படைகளுக்குத் தலைமை தாங்கியவன் இராஜராஜ பிரம்மராயன் என்பவனவான். இவனுக்கு உதவியாகப் பணிபுரிந்த தளபதிகள் உத்தம சோழ சோடகங்கனும், உத்தம சோழமிலாடுடையானும் ஆவார்கள்.

9. இராஜராஜ பிரம்மராயன் போரில் இறந்தான். இவன் நினைவாக, ஓர் பள்ளிப்படைக் கோயிலை கீழைச்சாளுக்கிய இராஜராஜன் கட்டினன். இச்சிவன் கோயில் கலிதிமிதி (கலிதிண்டி) என்னுமிடத்தில் கட்டப்பட்டது. இக்கோயில் "இராஜராஜீஸ்வரம்" என்றும் அழைக்கப்பட்டது. இக்கோயிலுக்கு நிவந்தங்களும் அளிக்கப்பட்டன.

10. சோழர்படைத் தளபதி உத்தமசோழ சோடகங்கனும் போரில் இறந்தான். இவன் நினைவாக கடப்பற்று என்னுமிடத்தில், ஓர் சிவன் கோயிலும் கட்டப்பட்டது. இப்பள்ளிப்படைக்கோயிலுக்கு நிவந்தங்களும் அளிக்கப்பட்டன.

11. மூன்றாவதான தளபதி உத்தமசோழ மிலாடுடையானும் போரில் இறந்தான். இவன் நினைவாக அவக்கூறு என்னும் இடத்தில் பள்ளிப்படைவீடாக ஒரு சிவன்கோயில் கட்டப்பட்டது. இக்கோயிலுக்கும் நிவந்தங்கள் கொடுக்கப்பட்டன.

12. இம்மூன்று தளபதிகளின் நினைவாக சத்திரங்கள் கட்டப்பட்டு 50 மாணவர்களுக்கு கல்வி புகட்டவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. "கலிதிமிதி" என்னும் ஊர் "மதுராந்தகநல்லூர்" என்று இராசேந்திரசோழன் பெயராலும் அழைக்கப்பட்டது.

தமிழ்ப்படை வீரர்களுக்கு ஆந்திரத்தில் மூன்று பள்ளிப்படைவீடுகள் கட்டப்பட்டன. இப்படை வீடுகளின் கதி என்ன ஆயிற்று?

என்னை என்றும் ஆசீர்வதிக்கும் மகான், பத்மஸ்ரீ S. R. பாலசுப்ரமண்யம் அவர்கள், இப்பள்ளிப்படைக் கோயில்களை நேரில் கண்டு இதன் விவரங்களைத் தம்முடைய "Middle Chola Temples" என்னும் நூலில் பக்கம் 325 இல் படிப்போர் நெஞ்சம் உருகும்படி எழுதியுள்ளார்கள். இதன் விவரமாவது:

1. **கலிதிண்டி இராஜராஜ பிரம்மராயன் நினைவாலயம்:** (கலிதிமிதி மருவி கலிதிண்டி ஆயிற்று)

இப்பள்ளிப்படைவீடு இராஜராஜேச்சுரம் என்னும் பெயர் கொண்டது. கலிதிண்டி கிராமம் விஜயவாடாவிற்குத் தெற்கே 80 கிலோ மீட்டர் தூரத்தில் சோழயாற்று ஏரியின் கிழக்குக் கரையில் உள்ளது. இராஜராஜேச்சுரம் என்னும் சிவன்கோயில் இன்று இடிபாடுகளுடன் காட்சியளிக்கின்றது. கர்ப்ப இல்லம் இடிந்துவிட்டது. அர்த்த மண்டபத்தின் அடிப்பகுதியையே இன்று காணலாம். நந்தியும், கொடிமரமும் காலத்தின் கோலத்தினின்று தப்பியுள்ளன.

2. **உத்தமசோழ சோடகங்கன் நினைவாலயம்:**

இக்கோயில் கலிதிண்டியிலிருந்து மேற்கே 3 கிலோமீட்டர் தூரத்தில் வயல்களின் நடுவே இடிந்து இருந்தது. எவரோ ஒரு புண்ணிய புருஷர் இக்கோயிலைப் புதுப்பித் துள்ளார். இதுவே "கடப்பற்று" என்று செப்புப்பட்டயத்தில் கூறப்படும் பகுதியாகும்.

3. **உத்தமசோழ மிலாடுடையான் நினைவாலயம்:**

அவக்கூறு என்னுமிடத்தில் இந்நினைவாலயம் கட்டப்பட்டதாக செப்பேடு கூறுகிறது. இவ்வூர் கலிதிண்டிக்கும், கடப்பற்றுக்கும் இடையில் இருந்தது. ஆனால் இன்று அவக்கூறும், சிவன் கோயிலும் இருக்குமிடம் தெரியவில்லை.

இம்மூன்று கோயிலின் இறைவனை நெஞ்சில் நிறுத்தி மூன்று சோழர்ப் படைத் தளபதி களுக்கும் அஞ்சலி செலுத்தி நம் நன்றிக்கடனையும் ஆற்றுவோமாக. ஆந்திரா சென்றால், தயவுசெய்து இப்பகுதிகளைப் பாருங்கள். கங்கைகொண்டமன்னன் இராசேந்திரனின் ஆத்மா ஆசிவழங்கும்.

# மூன்ரும் குலோத்துங்கன்

மூன்ரும் குலோத்துங்கன் கி. பி. 1178 இல் முடிசூடி 1217 வரை சோழ சாம்ராஜ்யத்தை ஆட்சிபுரிந்தவன். இவன் இரண்டாம் இராஜராஜனின் புதல்வனுவான். காலஞ்சென்ற திரு. சதாசிவபண்டாரத்தார் அவர்களும், குலோத்துங்கன் இராஜராஜனின் மகன்தான் என்பதனை உறுதிசெய்துள்ளார்கள். ஆனல் ஒருசில வரலாற்று அறிஞர்கள் "குலோத்துங்கன் இராஜராஜனின் மகனுவான்" என்னும் கருத்தை ஏற்கவில்லை. ஆகையால் குலோத்துங்கனின் சோழ வம்ச பரம்பரையைப்பற்றி இங்கு ஆராய்வோம்.

குலோத்துங்கனுக்கு முன் சோழநாட்டை அரசாட்சிபுரிந்தவன் இரண்டாம் இராஜாதிராஜன் ஆவான். இவன் கி. பி. 1166 முதல் 1180 வரை அரசுபுரிந்தவன். இவன் இரண்டாம் இராஜராஜனின் சகோதரி நெறியுடைப் பெருமா என்பவளின் மகனுவான். பல்லவராயன் பேட்டைச் சாசனம் (433/1924) இராஜாதிராஜனின் 8-ஆம் ஆட்சியாண்டிற்குரியது. இக்கல்வெட்டில் இராஜாதிராஜன் தான் சோழநாட்டு மன்னனுக அரசுக்கட்டில் ஏறிய சூழ்நிலையை எடுத்துரைக்கிருன். (இக் கல்வெட்டைப்பற்றிய ஆராய்ச்சியை அண்மையில் என்னுல் வெளியிடப்பட்ட "அருளுடைச் சோழமண்டலம்" என்னும் நூலில் காணவும்). பல்லவராயன் பேட்டைச் சாசனத்தின் வாயிலாக அறியப்படும் செய்தியாவது,

"இரண்டாம் இராஜராஜன் நோய்வாய்ப்பட்டான். அவனது மக்கள் சிறுவர்களாக இருந்தனர். ஆகவே இராஜராஜன் தன் சகோதரியின் மகனும் இராஜாதிராஜனுக்கு கி. பி. 1166 ஜனவரியில் முடிசூட்டினுன்; இராஜராஜன் இறந்துவிட்டால் இராஜாதிராஜனே தொடர்ந்து ஆளவேண்டும்; பிறகு உரிய பருவம் வந்தவுடன், இராஜராஜனின் மகன்கள் ஒருவனிடத்து இராஜாதிராஜன் ராஜ்யத்தை ஒப்படைக்கவேண்டும்" என்றும் விதித்தான். பல்லவராயன் பேட்டைச் சாசனம் கி. பி. 1173-74க்கு உரியது. குலோத்துங்கன் 1178 இல் முடிசூடப் போகிறவன். இச் செய்திகள் வாயிலாகவும் ஏனைய சரித்திர நிகழ்ச்சிகள் துணைகொண்டும் நாம் அறிவதாவது:

1. இரண்டாம் இராஜராஜனின் இரு மக்களும் 1166க்கு முன் சிறுவர்களாக இருந்தார்கள்.
2. இராஜாதிராஜன் முடிசூடியது கி. பி 1166.
3. இரண்டாம் இராஜராஜன் கி. பி. 1172 இல் இறந்தான்.
4. இச் செய்திகளை 1173-74 இல் இராஜாதிராஜன் எடுத்துரைக்கிருன். அப்போது மறைந்த இராஜராஜனின் இருமக்களும் அரசிளங்குமரர்களாக இருந்திருக்கவேண்டும்.
5 1178 இல் குலோத்துங்கன் முடிசூடுகிருன்.
6. 1178 முதல் 1180 வரை இராஜாதிராஜனும், குலோத்துங்கனும் இணைந்து ஆட்சிபுரிகின்றனர்.
7. 1181-இலிருந்து 1215 வரை இராஜாதிராஜன் ஆந்திராவில் வாழ்ந்தான்.

**தொகுத்து நோக்கினல்:**

இராஜராஜனின் மக்கள் 1166க்கு முன் சிறுவர்களாக இருந்ததால், தான் 1166 இல் அரசுக்கட்டில் ஏறியதை, இராஜாதிராஜன் 1173-74 இல் எடுத்துரைத்து, 1178 இல் குலோத்துங்கனுக்கும் முடிசூட்டி, அவனுடன் சேர்ந்து இரண்டு வருடங்கள் அரசுபுரிந்தான் என்று அறிகிரேம். ஆகவே இராஜராஜனின் இரு மக்களில் ஒருவனே மூன்ரும் குலோத்துங்கன் என்பதை எளிதில் உணரலாம்.

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலைச் சாசனங்களில் குலோத்துங்கன், தன் தந்தை இராஜராஜனைக் குறிப்பிடுகிறான்.

"எத்தரையும் தொழும் இறைவர் எதிரம்பலம் செம்பொன் வேய்ந்து
சித்திரைவிழா அமைத்திறைவி திருக்கோபுரம் செம்பொன் வேய்ந்து
அரிபிரமர் தொழும் இறைவற்கு அகிலமெல்லாம் தொழுது போற்றத்
திரிபுவன வீச்சரம் செய்து திருவைகாசியும் சிறந்த
திருவாவணியும் திசை விளங்கு ..............யூர்
நிறைந்த செல்வத்துடன் விளங்க நிலவுந்திருநாள் கண்டு.........
தாரணிகொள் திருத்தாதைக்கும் இராசராசீச்சுரத் தார்க்கும்
காரண்ணச் சிறந்த கோயில் அணிதிகழ் பொன் வேய்ந்தருளி"

என்னும் மெய்க்கீர்த்திப் பகுதியில் தன் திருத்தாதையால் எடுப்பிக்கப்பட்ட இராசராசேச்சுரம் (தாராசுரம்) கோயிலுக்கு குலோத்துங்கன் திருப்பணி செய்ததாகக் கூறுகிறான். இராசராசேச்சுரம் கோயிலை எடுப்பித்தவன் இரண்டாம் இராஜராஜனுவான். ஆகவே, குலோத்துங்கன் இராஜராஜனின் மகன் தான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தஞ்சை ஜில்லாவில் பாபநாசம் தாலுகாவில் ராஜகிரி, திருப்பாலத்துறை என்னும் ஊர்களில் உள்ள கல்வெட்டுக்களினுலும் சில செய்திகளை அறிகிறோம். (திருப்பாலத்துறையி லிருந்து மேற்கே மூன்று மைலில் ராஜகிரி உள்ளது)

### 1. திருப்பாலத்துறை கல்வெட்டு எண். 440/1912

இக் கல்வெட்டு இரண்டாம் இராஜராஜனின் 12-ஆம் ஆட்சி 264-ஆம் நாளுக்கு உரியது. இதன் காலம் கி. பி. 1158 ஆகும். இக் கல்வெட்டின்படி "பழைய தோப்புக்களும், தோட்டங் களும் உள்ள நிலப்பகுதிகளுக்கு ராஜகம்பீரநல்லூர் என்று புதிய பெயர் அளிக்கப்பட்டது" என்னும் செய்தியை அறியலாம். இராஜகம்பீரன் என்பது இரண்டாம் இராஜராஜனின் விருதுப்பெயராகும்.

### 2. ராஜகிரி கல்வெட்டு எண். 4/1945-46.

இக் கல்வெட்டு இரண்டாம் இராஜராஜனின் 17-ஆம் ஆட்சி ஆண்டுக்குரியது. இதன் காலம் கி. பி. 1162-63 ஆகும். இக்கல்வெட்டில், "இராஜகேசரி சதுர்வேதி மங்கலத்தில் (ராஜகிரியில்) ராஜகம்பீரமுடையார் என்னும் கோயில் எடுப்பிக்கப்பட்டது" என்னும் செய்தியை இராஜராஜன் கூறுகிறான். இராஜகம்பீரநல்லூர் என்னும் ஊர் 440/1912 கல்வெட்டிலும் குறிக்கப்படுவதை ஈண்டு நோக்கவேண்டும். ஆகவே, திருப்பாலத்துறைக்கும், ராஜகிரிக்கும் இடையே இராஜகம்பீரநல்லூரில், இராஜகம்பீரமுடையார் ஆலயத்தை, இராஜராஜன் எடுப்பித்தான் என்பது அறியப்படுகிறது.

### 3. திருப்பாலத்துறை கல்வெட்டு எண். 439/1912.

இக் கல்வெட்டு மூன்றும் குலோத்துங்கனின் நான்காம் ஆட்சி ஆண்டுக்குரியது. இதன் காலம் கி. பி. 1181-82 ஆகும். இதில் கூறப்படும் செய்தியாவது :

(a) பெண்ணுகடத்துப் பெரியதேவன் நம்பி என்பவன் ராஜகம்பீரநல்லூரில் உள்ள நிலங்களுக்கு முழு உரிமைபெற்றவன்.

(b) இவன் பெரியதேவருக்கும் நாச்சியாருக்கும் திருமேனிகள் எடுப்பித்தான்.

(c) இத் திருமேனிகளுக்கு, குலோத்துங்கன் ஆபரணங்களை அளித்தான்.

இவைகளைத் தொகுத்து நோக்கினல்,

குலோத்துங்கன் தன் தந்தைக்கும் (இராஜகம்பீரன்) தாய்க்கும் திருமேனிகள் எடுப்பிக்கச் செய்து, அத் திருமேனிகளுக்கு ஆபரணங்களும் அளித்தான் என்னும் உண்மையை அறியலாம்.

### திருக்கடையூர் கல்வெட்டு எண். 42/1906.

இக் கல்வெட்டு குலோத்துங்கனின் 16-ஆம் ஆட்சியாண்டுக்குரியது. இதன் காலம் 1193–94 ஆகும். இக் கல்வெட்டில் கூறப்படும் செய்தியாவது :

(a) வாணதராயன் என்பவன் அரையன் ராஜராஜதேவர் என்னும் பெயர்கொண்டவன். இவன் "இராஜராஜேஸ்வரன்" என்னும் திருமேனியை எடுப்பித்தான்.

(b) இத் திருமேனியின் பூசை வழிபாட்டிற்காக, குலோத்துங்கன் நிலங்களைத் தானமாக அளித்தான்.

### திருக்கடையூர் கல்வெட்டு எண். 43/1906.

இக்கல்வெட்டும் குலோத்துங்கனுக்கு உரியது. இதன் காலம் 31—3—1194 ஆகும். இக்கல்வெட்டின் செய்தியாவது :

(a) திருக்கடையூரில் பொதுமக்கள் சபை ஒன்று இருந்தது.

(b) இச்சபையினர் "இராஜராஜேஸ்வரரின்" திருமேனிக்கு நிலங்களைத் தானமாக அளித்தனர்.

தொகுத்து நோக்கினுல் மூன்ரும் குலோத்துங்கன், திருக்கடையூரிலும் தன் தந்தையாகிய இராஜ ராஜனின் பெயரால் திருமேனி எடுப்பித்தான் என்னும் உண்மையை அறியலாம்.

### திருப்பாம்புரம் (பேரளம் அருகில்) கல்வெட்டு எண். 91/1911.

இக்கல்வெட்டு குலோத்துங்கனின் 28 ஆம் ஆட்சி ஆண்டுக்குரியது. இதன் காலம் 1205–06 ஆகும். இக்கல்வெட்டில் "புதியதாக விநாயகப் பிள்ளையார்" கோயில் எடுப்பிக்கப் பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இக்கோயிலும் "இராஜராஜ விநாயகப் பிள்ளையார்" என்னும் பெயரால் அழைக்கப்பட்டது.

### திருப்பாம்புரம் கல்வெட்டு எண். 92/1912.

இது குலோத்துங்கனின் 35 ஆம் ஆட்சி ஆண்டுக்கு உரியது. இதன் காலம் 1212–13 ஆகும். "பெரிய தேவருக்கும், நாச்சியாருக்கும்" திருமேனிகள் எடுக்கப்பட்ட செய்தியைக் குலோத்துங்கன் கூறுகிருன்.

### திருப்பாம்புரம் கல்வெட்டு எண். 93/1911.

இக்கல்வெட்டும் குலோத்துங்கனின் 35 ஆம் ஆட்சியாண்டிற்குரியது. இக்கல்வெட்டில் முன் கல்வெட்டில் கூறப்பட்ட "பெரியதேவர், நாச்சியாரின்" திருமேனிகளுக்கு தேவரடியார் ஒருவள் நிவந்தங்கள் அளித்தாள் என்றும் கூறப்பட்டுள்ளது.

### திருப்புகலூர் கல்வெட்டு எண். 108/1927–28.

இக்கல்வெட்டு மூன்ரும் குலோத்துங்கனுடைய 28 ஆம் ஆட்சியாண்டுக்குரியது. இதன் காலம் 1205–06 ஆகும். இக்கல்வெட்டில் "குலோத்துங்கவளநாட்டு அரசனஞ்சேரியில் உள்ள இராஜராஜேச்சுரம்" என்னும் கோயிலுக்கு மன்னன் அளித்த நிலதானங்கள் கூறப்பட்டுள்ளன.

ஆட்சியாண்டு மறைந்துள்ள 107 / 1927–28 இன் திருப்புகலூர் கட்வெட்டிலும், "இராஜராஜேச்சுரம்" உடையார் கோயிலுக்கு குலோத்துங்கன் அளித்துள்ள நிவந்தங்களும் கூறப்பட்டுள்ளன.

இச்செய்திகளை ஆராயுமிடத்து குலோத்துங்கன்,

(a) தன் தந்தையால் எடுப்பிக்கப்பட்ட தாராசுரம் கோயிலுக்கு திருப்பணிகள் செய்தான்.

(b) தந்தையின் பெயரால் திருமேனிகளை, இராஜகம்பீரநல்லூர், திருக்கடையூர், திருப்பாம்புரம், திருப்புகலூர் ஆகிய ஊர்களில் எடுப்பித்தான்.

(c) தன் தந்தையின் பெயரால் இராஜராஜேச்சுரம் சிவன் கோயிலையும், இராஜராஜ விநாயகப் பிள்ளையார் கோயிலையும் எடுப்பித்தான்.

என்னும் உண்மைகளை அறியலாம்.

"தன்னுடைய பிள்ளைப் பிராயத்தில் தந்தையை இழந்த குலோத்துங்கன், தனது ஆட்சிக்காலத்தில் தந்தையின் பெயரால் திருமேனிகள் எடுப்பித்துத் தெய்வ வழிபாடுகளை ஏற்படுத்தினன்", என்னும் உண்மை வரலாறு நம் நெஞ்சத்தைத் தொடுவதாக உள்ளது.

இரண்டாம் இராஜராஜனுக்கு, "புயல் வாய்த்து" என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி "திருநறையூர்" ஆலயத்தில் உள்ளது (165/1908). இம்மெய்க்கீர்த்தியையே இராஜராஜனின் மகனை மூன்றும் குலோத்துங்கன் தன் கல்வெட்டுக்களிலும் முழுமையாக வடித்துள்ளான் என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது.

**மீண்டும் பல்லவராயன் பேட்டைச் சாசனத்திற்கு வருவோம்:** இச்சாசனத் தாலும் ஏனைய சரித்திர நிகழ்ச்சிகளாலும் அறியப்படும் செய்திகள் முறையே,

(a) கி. பி. 1166-க்கு முன் இராஜராஜனின் இரு மக்கள் குழவிகளாக இருந்தனர்.

(b) 1166-இல் இராஜாதிராஜனுக்கு, இராஜராஜன் முடிசூட்டினன்.

(c) 1172-இல் இராஜராஜன் இறந்தான்.

(d) இச்செய்திகளை 1173–74 இல் இராஜாதிராஜன் கூறுகிறான்.

இராஜராஜன் தான் இறப்பதற்கு முன், தன் மக்களில் இன்னாருக்குத்தான் பிற்காலத்தில் பட்டம்சூட்ட வேண்டுமென்று இராஜாதிராஜனிடத்துக் கூறியிருப்பான் என்பது திண்ணம். ஆகவே, இராஜாதிராஜன் 1178 இல் குலோத்துங்கனுக்கு முடிசூட்டி வைத்தது **இராஜராஜனின் கடைசிக்காலத்து விருப்பப்படி செயல்படுத்தப்பட்டதே ஆகும்** என்றே கொள்ளவேண்டும்.

1166-க்கு முன் இராஜராஜனின் பிள்ளைகள் "ஒன்றும், இரண்டும் வயதுடையவர்களாக இருந்தார்கள்" என்னும் செய்தியை 1173–74இல் பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டில் இராஜாதிராஜன் அறிவிக்கிறான். இப்பிள்ளைகள் 1173-74-இல் இளங் குமாரர்களாக அரசிளஞ் சிங்கங்களாக இருந்திருப்பார்கள். இவர்களைப்பற்றி 1173–74-இல் குறிப்பிடும்போது, "மூத்தவன் வயதை முன்மொழியாது இளையவன் வயதை" முன் மொழிகின்றான். 1178-இல் குலோத்துங்க னுக்கு முடிசூட்டப்போவதை இராஜாதிராஜன் அறிவான். ஆகவே குலோத்துங்கனுக்கு முடி சூட்டுவதற்கு ஐந்து வருடங்களுக்கு முன் வெட்டப்பட்ட சாசனத்தில், இராஜராஜனின் மக்களைப்பற்றி கூறுமிடத்து, "இளையவன் வயதை முன்மொழிந்து, மூத்தவனின் வயதை பின் மொழிந்தான்" என்றால் இதன் பொருள் என்ன? அவ்விளையவனே 5-ஆண்டுகளுக்குப் பிறகு முடிசூடப்போகும் குலோத்துங்கன் என்பதை அறியலாம்.

முதல் இராஜேந்திரன், முதல் இராஜாதிராஜன் இவர்களின் மெய்க்கீர்த்திகளை உற்று நோக்கினால் ஓர் உண்மைப் புலப்படும். இம்மன்னர்கள் தங்களின் மகன்களையும் சகோதரர் களையும் குறிப்பிடும்போது, மூத்தவர்களை முன் சொல்லியும் இளையவர்களைப் பின்னேயும் வரிசைப் படுத்திச் சொன்னார்கள். அவ்விதமே அம் மகன்களும், சகோதரர்களும் பிற்காலத்தில் அரசு புரிந்தார்கள். ஆனால்

(a) 1178-இல் குலோத்துங்கனுக்கு முடிசூட்டப்போகிற இராஜாதிராஜன்

(b) 1173–74-இல்

(c) தான் முடிசூடிய 1166-க்கு முன்

(d) இராஜராஜனின் பிள்ளைகள் "ஒருவயதும் இருவயதும் உடையவர்களாக இருந்தார்கள்" என்று கூறுகிறான்.

**"பிள்ளைகள் இருவயதும், ஒருவயதும் உடையவர்களாக இருந்தார்கள்"** என்று கூறும் முறையை மாற்றி இளையவனை முன் மொழிந்தான் இராஜாதிராஜன். இதன் பொருள் என்ன? **இராஜராஜனின் இளைய மகனே மூன்றும் குலோத்துங்கனுவான்.** அப்படியானால் மூத்தவன் என்ன ஆனான்? மூத்தோனைப்பற்றி அறியக்கூடிய கல்வெட்டுக்கள் இதுவரை கிடைத்தில; ஆகவே இதற்குரிய விடை, "தெரியாது" என்பதாகும்.

குலோத்துங்கன் II (*1135-1152*)

இராஜராஜன் II (*1146-1172*)

மகள் நெறியுடைப் பெருமா

இராஜாதிராஜன் II (*1166-1180*)

மூத்தோன் என்ன ஆனான் ? தெரியாது.

இளையோன் குலோத்துங்கன் III *1178-1217*

இராஜராஜனின் **இளைய மகனே** மூன்றாம் குலோத்துங்கனாவான் என்னும் கருத்தினைப் புதிய கோணத்தில் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் முன் வைத்துள்ளேன். வாதப்பிரிதி வாதங்களை வரலாற்று உலகம் தொடருமாக.

## புவியியலும் – தொல்பொருள் ஆராய்ச்சியும்
## (Geology and Arachaeology)

கும்பகோணத்திலிருந்து ஐந்து மைல் தூரத்தில், காவிரியின் வடகரையில் திருவிசநல்லூர் என்னும் கிராமம் உள்ளது. இவ்வூருக்கு வடக்கே ஒரு மைலில் கருகமரக்காடு ஒன்று அடர்த்தியாக வளர்ந்துள்ளது. இக்காட்டின் நடுவில் பாழ்பட்ட சிவன் கோயில் ஒன்றும் உள்ளது. இது நாண்டாங்கோயில் என்று அழைக்கப்படுகிறது. இவ்வாலயம் 300 × 200 அடி பரப்பில் அமைந்துள்ளது. ஆலயத்தைச் சுற்றி முப்புறங்களிலும் நீர் நிறைந்த 50 அடி அகலமுள்ள அகழி உள்ளது.

இவ்வாலயமே, சம்மந்தப்பெருமானின் பாடல் பெற்ற ''திருந்துதேவன்குடி'' என்னும் தலமாகும். இங்குள்ள கல்வெட்டுக்களிலும் ''திருந்துதேவன்குடி'' என்று கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்களின்படி, இவ்வாலயம் முதற்குலோத்துங்க சோழனால் கி. பி. 1117-இல் கற்றளியாகக் கட்டப்பட்டது என்பதை அறியலாம்.

இவ்வாலயத்து வெளிப்பிரகாரத்து வடக்குச்சுவரின் அடிப்பகுதியிலும், அம்மன் கோயிலின் சுற்றுச்சுவரிலும் சில விசித்திரமான கற்படிவங்கள் நூற்றுக்கணக்கில் காணப்படுகின்றன. ஒவ்வொரு கற்படிவமும் 30 அங்குலம் நீளமும், 9 அங்குலம் அகலமும், 12 அங்குலம் உயரமும் கொண்டது. செந்நிறமாகவும், ''பொரபொரவென்று'' மணற்கற்போன்றும் காட்சியளிக்கின்றன. இக்கற்படிவங்களில் கிளிஞ்சல் சிப்பிகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிப்பியும் 2 அங்குலத்திலிருந்து 4 அங்குலம் வரையுள்ளது. இச்சிப்பிகளைத் தனியாகப் பிரித்து எடுத்துவிடலாம். இதனை நானும், தமிழ்நாடு தொல்பொருள் துறை டைரக்டர் திரு நாகசாமி அவர்களும் சமீபத்தில் கண்டோம். இக்கற்படிவங்கள் கடற்கரைப் பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்டனவாக இருக்கலாம் என்றுகூட கருதினோம்.

கோபுரவாசலுக்கு அருகில் சாம்பல் வண்ணத்தில் அழுத்தமான கற்படிவங்களும் உள்ளன. இவைகளின் நடுவே வெண்மை நிறத்தில் சிப்பிகள் நிறைய உள்ளன. இவ்வகை சிப்பிகள் கல்லுடன் ஒன்றி ரேகைகள் போன்று காணப்படுகின்றன. இம்மாதிரியான படிவங்கள் கடற்கரைப் பகுதிகளிலிருந்து வருவதற்கு நியாயமில்லை. எப்படியாயினும் சிப்பிகளுடன் கூடிய செந்நிறப் படிவங்களும், சாம்பல் நிறப்பாறைகளும் புதிராகவே காட்சியளித்தன.

திருச்சிமாவட்டம், அரியலூரின் அருகில் ''சிப்பிகளுடன் கூடிய பாறைகள்'' மிகுந்து காணப்படுகின்றன. இப்படிவங்களைப் புவியியல் நிபுணர்கள் ஆராய்ந்துள்ளனர். பலகோடி ஆண்டுகட்குமுன் இப்பகுதி கடலால் சூழப்பட்டிருந்தது என்று புவியியல் நிபுணர்கள் கருதுகிறார்கள். பிற்காலத்தில் கடற்சிப்பிகள் பாறைகளுடன் ஒன்றிவிட்டன என்றும் கருதுகிறார்கள். (24—10—1976 ஆனந்த விகடன் காண்க). அரியலூர்ப் பகுதியில் ''பழுவேட்டரையர்கள்'' என்னும சோழர்களின் அதிகாரிகள் அக்காலத்தில் இருந்து வந்தனர். அவர்களே இப்பாறைகளை கி. பி. 1177-இல் திருந்துதேவன்குடிக்குக் கொண்டுவந்திருக்க வேண்டும். இவ்வாலயத்துப் படிவங்களை அரியலூர்ப் பாறைகளுடன் ஒப்பிட்டுப் பரிசோதித்தால் உண்மை விளங்கும்.

சிப்பிகளுடன் கூடிய சாம்பல் வண்ணப் படிவங்களைப் பட்டவர்த்தியில் உள்ள பாழ்பட்ட சிவன் கோயிலிலும் காணலாம். இவ்வூர் சுவாமிமலையிலிருந்து திருவைகாவூர் செல்லும் வழியில் 4 மைலில் உள்ளது. குளக்கரையிலும் இப்பாறைப் படிவங்கள் உள்ளன. இவை கோயிலின் இடிபாடுகளின் பகுதிகளாகும்.

ஆனந்தவிகடனில் வெளியான அரியலூர் பாறைகளின் செய்தி தொல்பொருள் ஆராய்ச்சிக்கும், கோயிற் கட்டிடக்கலை ஆராய்ச்சிக்கும் பெரிதும் துணைபுரிகின்றது. அரியலூரில் "Wood Fossil" எனப்படும் படிவங்களைப் பற்றிய செய்தியும் வெளியாகியுள்ளது. இப்பாறைகள், மரங்கள் கற்களாக மாறிய கோலங்களாகும். இம்மாதிரியான மரக்கற்களை (Wood Fossil) மைலத்திற்கு அருகில் உள்ள திருவக்கரை என்னும் தலத்தில் ஏராளமாகக் காணலாம். மரங்கள் பூமிக்கு அடியில் புதையுண்டு போவதால் கற்களாகவும் நிலக்கரிப் படிவங்களாகவும் மாறுகின்றன. இயற்கையான இந்த இரசாயன மாறுதல் அதி ஆச்சர்யமானது. அரியலூரிலும் திருவக்கரையிலும் மரக்கற்கள் காணப்படுவதாலும் இடையிலுள்ள நெய்வேலியில் நிலக்கரி (Lignite) கிடைத்தலும் ஆராய்ச்சிக்குரியன. அரியலூரிலிருந்து திருவக்கரை 80 மைல். இப்பகுதியில் தென்மேற்கே மரக்கற்களும், இடையில் நிலக்கரியும், வடகிழக்கே மீண்டும் மரக்கற்களும் காணப்படுவதால், இப்பகுதி புவியியல் ஆராய்ச்சிக்கு உகந்த ஒரு பிரதேசமாகும் (Geological Belt).

நாச்சியார்கோயிலுக்குக் கிழக்கே 6 மைலில் அரசலாற்றின் தென்கரையில் துக்காச்சி என்னும் கிராமம் உள்ளது. இவ்வூரில் ஒரு பெரிய சிவன்கோயில் பாழ்பட்டு இடிபாடுகளுடன் உள்ளது. இது கி. பி. 1122-இல் விக்கிரமசோழனல் கட்டப்பட்டது. இவ்வாலயத்து வெளி மதிற்சுவர்கள் இடிந்து காணப்படுகின்றன. பிரகாரத்தின் வெளிச் சுவர் விசித்திரமாக உள்ளது. உட்புறமும், வெளிப்புறமும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளன. சுமார் 3 அடி அகலமுள்ள சுவரின் மத்தியபாகத்தில் வெண்மையான துண்டுக்கற்கள், சுண்ணும்புகொண்டு பிணைக்கப்பட்டு காங்கிரீட் போன்று உள்ளன. இத்துண்டுக்கற்களை இரண்டுவகையாகப் பிரிக்கலாம்.

1. ஒருவகை வெண்மை நிறமான சலவைக் கற்களாகும். இம்மாதிரியான கற்கள் ஆந்திராவில் நாகார்சுனகொண்டாவிலிருந்து மாச்சர்லா வரும் வழியில் சாலையின் இருபுறங்களிலும் பாறைகளாக உள்ளவற்றைப் பார்த்திருக்கிறேன். இவை சலவைக் கற்களாகவோ அல்லது "ஜிப்ஸப்" படிவங்களாகவோகூட இருக்கலாம். அரியலூர்ப் பகுதியில் கிடைக்கும் ஜிப்ஸப் படிவங்களும் கொண்டுவரப்பட்டிருக்கலாம்.

2. சில கற்கள் வெண்மையும் இளம்பச்சை நிறமும் கொண்டு உள்ளன. இம்மாதிரியான கற்களை செஞ்சிக்கு அருகில் உள்ள மேலைச்செவ்வூர் ஆலயத்திலும் காணலாம்.

புவியியல் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு வேண்டுகோள். தயவுசெய்து இடிபாடுகளுடன் உள்ள ஆலயங்களைப் பாருங்கள். சிலைகளிலும், சுவர்களிலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் விசித்திரமான கற்படிவங்களைக் காணுங்கள். இக் கற்கள் எங்கிருந்து கொண்டுவரப் பட்டிருக்கலாம் என்ற வினவை எழுப்பி, ஆலயத்தைக் கட்டின மன்னனின் காலத்தைக் கல்வெட்டுக்களின் துணைக்கொண்டு நிர்ணயம் செய்தால், அம்மன்னனின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்கள் எவை எவை என்பதையும் ஓர் அளவு அறியலாம். உதாரணமாக விக்கிரமசோழன், சோழ மன்னன் ஆவதற்கு முன் ஆந்திராவில் முதற்குலோத்துங்கனின் பிரதிநிதியாக ஆட்சி செய்தவன். இவன் குலோத்துங்கனின் மகனுவான். இவன் ஏன் வெண்நிறக்கற்களை ஆந்திராவிலுள்ள மாச்சர்லாவிலிருந்து துக்காச்சிக்குக் கொண்டுவந்திருக்கக்கூடாது? அல்லது அரியலூர் பகுதிகளிலிருந்தும் கொண்டுவந்திருக்கலாம். எப்படியிருப்பினும் "புவியியல்" பரிசோதனைகளை இடிந்த ஆலயங்களில் நடத்தினல் தொல்பொருள் வரலாற்று ஆராய்ச்சிக்கு அவை துணைபுரியும் என்பது திண்ணம்.

# வரலாற்றின் வரலாறு

தமிழகத்தின் வரலாற்றை அறிந்துகொள்ள துணைபுரியும் சாதனங்கள் முறையே ஆலயங்களிலும், குன்றுகளிலும், வெற்றித் தூண்களிலும் உள்ள கல்வெட்டுக்கள், செப்பேடுகள், இலக்கியங்கள், தொல்பொருள் அகழ்வாராய்ச்சி, பழங்காசுகள் முதலியவைகளாகும். இச்சாதனங்களின் துணைகொண்டு சரித்திர வரலாற்றை அறிந்துகொள்ளுவதற்கு அரும்பணி யாற்றியவர்கள் வெள்ளைக்காரர்களே ஆவர். 1850-லிருந்து 1910 வரை இப்பெரியோர்கள் தமிழகத்தில் அரிய ஆராய்ச்சிகள் நடத்தினர். கர்னல் மெக்கன்ஸி, ஹூல்ஷ், ப்ளீட், ரைஸ், கீல்ஹார்ன், ராபர்ட்ஸ்வெல், ஜகோபி போன்ற பெரியோர்களே சரித்திர ஆராய்ச்சிக்கு அசையாத அஸ்திவாரமிட்டவர்கள். இவ்வாய்வாளர்கள், தமிழைக் கற்றூர்கள்; தமிழ் இலக்கியங்களை நுணுகி ஆராய்ந்தார்கள். வடமொழி, தெலுங்கு, கன்னடம் முதலிய மொழி களிலும் புலமை பெற்றூர்கள். இம்மொழிகளிலுள்ள இலக்கியங்களைப் பயின்று கல்வெட்டு, செப்பேட்டுச் சாசனங்களுடன் ஒப்புநோக்கி தென்னகத்தின் வரலாற்றை அறியும் வகையில் அறிக்கைகளும் வெளியிட்டார்கள் வெள்ளைக்கார ஆராய்ச்சியாளர்களுடன், திரு. கோபிநாதராவ், திரு கிருஷ்ண சாஸ்திரி, திரு K. V. சுப்பிரமணிய அய்யர், திரு. வெங்கையா போன்ற பெரியோர் களும் பணிபுரிந்தார்கள் சாசன அறிக்கைகளும், இவ்வறிக்கைகளின் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன. 1892-லிருந்து இவ்வறிக்கைகளை மூன்று வகையாக வெளியிட்டார்கள்.

## I. Archaeological Report on Epigraphy ஆண்டு சாசன அறிக்கை :

ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான ஆலயங்களுக்குச் சென்று கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் படியெடுத்தனர். இவைகளை முறையாகத் தொகுத்து, ஒவ்வொரு சாசனத்திற்கும் "எண்" இட்டு அச்சில் வெளியிட்டார்கள். உதாரணமாக, சாசன எண் 95/1898 என்று கூறினல், அக்கல்வெட்டு 1898-ஆம் வருடத்தில் படியெடுக்கப்பட்ட 95-ஆம் எண் கொண்ட சாசனம் என்பதாகும். இச்சாசன அறிக்கைகளைச் சுருக்கமாக A. R. E. என்று கூறுவார்கள். இம்மாதிரியான சாசன அறிக்கைகளில் ஒவ்வொரு சாசனத்தின் சுருக்கமான செய்தியும் வெளியிடப்பட்டது; இன்றும் வெளியிடப்பட்டு வருகிறது. 1892-லிருந்து, இன்று வரை சுமார் 30,000 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டு வெளிவந்துள்ளன இச்சாசன அறிக்கைகளின் பின்பகுதியில் அதுவரை கண்டுபிடித்த சாசனங்களின் துணைகொண்டு, வரலாறு சம்மந்தமான அறிக்கைகளையும் (Report) வெளியிட்டனர். 1892-லிருந்து 1910 வரை வெள்ளைக் காரர்களே இப்பணியில் பெரிதும் ஈடுபட்டார்கள் என்னும் உண்மைச் செய்தி இக்கால மக்களுக்குப் பெரிதும் ஆச்சர்யத்தை அளிக்கும். ஆம். இது உண்மை வெள்ளைக்காரர்கள் இவ்வாராய்ச்சிகளை நடத்தியிராவிட்டால் இன்று நாம் நமது நாட்டின் சரித்திரத்தை அறிந்து கொள்ளமுடியாது. வெள்ளைக்காரர்கள் மேலும் ஓர் அறிவுரையும் கூறிச்சென்றூர்கள். அதாவது **"திருப்பணியின் பெயரால் ஆலயங்களில் உள்ளக் கல்வெட்டுக்களும், தொல்பொருள் சின்னங்களும் அழிக்கப்படுகின்றன. இவ்வாறு செய்தல் கூடாது. கல்வெட்டுக்கள் தொல்பொருள் சின்னங்கள் முதலியவைகள் அழிவுருத வகையில் திருப்பணிகள் நடைபெறவேண்டும்"** என்று கூறிச்சென்றூர்கள். ஆனல் இவ்வறிவுரை பின்பற்றப்படவில்லை. திருப்பணிகள் நடக்கும் காலத்தில் கல்வெட்டுக்களும் தொல்பொருட்சின்னங்களும் அழிக்கப் பட்டன. ஆலயங்களில் உள்ள இப்பகுதிகள் இடிக்கப்பட்டு குப்பையாகக் கொட்டப்பட்டன. இடிக்கப்பட்ட பகுதியில் புதியதாக மண்டபங்கள் கட்டப்பட்டன. இடிக்கப்பட்ட பகுதிகளும், அழிக்கப்பட்ட கல்வெட்டுக்களும் போனது போனதுதான்; அவைகளை இனித் திரும்பப் பெறமுடியாது. ஆயிரம் வருடங்களாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்ட "கல்வெட்டுக்கள்" திருப்பணியின் காலத்தில் மறைந்துவிட்டன.

உதாரணமாக 1907-ஆம் ஆண்டுவரைத் திருவிடைமருதூர் ஆலயத்தில் 151 கல்வெட்டுக்கள் இருந்தன. 1907-08இன் திருப்பணியில், கர்ப்பக் கிரகம், அர்த்தமண்டபம் முதலிய சோழர் காலக் கலைக் கூடங்கள் – கல்வெட்டுக்களுடன் கூடிய பகுதிகள் இடிக்கப்பட்டு வெளியே எறியப்பட்டன. ஆலயத்திற்குப் புதிய கர்ப்பக் கிரகமும், அர்த்தமண்டபமும் கட்டப் பட்டன. இடிக்கப்பட்ட பகுதிகளுடன், சிலைகளும், கலையம்சம் பொருந்திய கொடுங்கைகள் முதலியவைகளும் உடைக்கப்பட்டன. இவ்விடிபாடுகளுடன் சோழர், பாண்டியர், விஜயநகர

மன்னர்களின் *121* கல்வெட்டுக்களும் அழிந்துபோய் விட்டன. இவ்விடிபாடுகளின் கதி என்ன ஆயிற்று ? தஞ்சை ஜில்லா வரலாற்றுப் பேரவை, – தொல்பொருள் வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தின் திருவிடைமருதூர்க் கிளையின் அங்கத்தினர்கள் அண்மையில் கோயிலின் பழைய இடிபாடுகளைக் கண்டுபிடித்தனர். இவ்விடிபாடுகளின் பரிதாபமான இன்றைய நிலையின் விவரம் வருமாறு :–

திருவிடைமருதூர் மஹாலிங்க சுவாமியின் ஆலயத்தின் வலது புறத்திலுள்ள கொல்லையிலும், உயர்நிலைப்பள்ளியின் மேற்குப் பகுதியிலும், ஆலயத்தின் பழைய இடிபாடுகள் சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பில் இறைந்து கிடக்கின்றன. இவைகளில் நாம் காணக்கூடியவை முறையே:– *1.* உடைக்கப்பட்ட சிலைகள், *2.* இடிக்கப்பட்ட கொடுங்கைகள், *3.* சோழர் காலக் கலையம்சம் கொண்ட கட்டிடப்பகுதிகள், *4.* கல்வெட்டுப் பகுதிகள் முதலியவைகளாகும்.

"மத்தியார்ச்சுனத்தில் ஆலயத்திற்கு நான் திருப்பணிகள் செய்தேன்" என்று திரிபுவனக் கல்வெட்டில் மூன்றாம் குலோத்துங்கன் கூறுகிறானே, அவ்வாறு அவனால் கட்டப்பட்டப் பகுதிகளும் இடிபாடுகளுக்கிடையில் பல துண்டங்களாக உள்ளன. இவைகளை நான் நேரிடக் காணும் காலத்தில், இடிபாடுகளின் நடுவே ஒரு துண்டுப் பகுதியில் "விக்கிரம சோழனின்" கல்வெட்டைக் கண்டேன். பல மன்னர்களின் கல்வெட்டுப் பகுதிகள் இக்குப்பை மேட்டில் பரிதாபமாக இறைந்துகிடக்கின்றன. இவ்விடிபாடுகளின் மற்றும் சில பகுதிகளைக் குளக்கரையில் துணிகளைத் துவைப்பதற்கு உபயோகப்படுத்திக்கொண்டு இருப்பதைக்கண்டு கண்ணீர் வடித்தேன். சில பகுதிகள் வீட்டின் உபயோகத்திற்கும் மாட்டுக்கொட்டகைக் கட்டுவதற்கும் கூட எடுத்துச் செல்லப்பட்டனவாம்.

**திருக்காரவாசல் :** வெள்ளைக்காரனால் *1907*-இல் படியெடுக்கப்பட்டக் கல்வெட்டுப் பகுதிகளின் துண்டுகள், இவ்வூரின் தென்கிழக்கே ஒரு தோப்பில் இறைந்து கிடக்கின்றன. **திருநீடூர் :** கல்வெட்டுக்களுடன் கூடிய இடிபாடுகள் குளக்கரையில் தாறுமாறாகக் கிடக்கின்றன. குளத்தில் நீர் வற்றினால் சில கல்வெட்டுக்களைக் காணலாம். **மாயூரம், திருச்சி, ஜம்புகேஸ்வரம் :** ஒரு சில கல்வெட்டுக்கள் போன இடம் தெரியவில்லை. நல்லவேளையாக வெள்ளைக்காரன் இவைகளையெல்லாம் படியெடுத்துள்ளான். போனது போகட்டும் இருப்பதை யாவது இனிக் காப்பாற்றுவோம். வெள்ளைக்காரர்களால் குறிப்பிடப்பட்டு வெளியிடப்பட்ட சாசன நூல்கள் கிடைப்பதுகூட அரிதாகியுள்ளன. இந்நூல்களை அரசாங்கத்தார் மீண்டும் அச்சிட்டுக் கல்லூரிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் வழங்கினால் (விற்பனையாகத்தான்) பெரிதும் உதவியாக இருக்கும்.

## II தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் (South Indian Inscriptions) :

இப்பகுதிகளில் கல்வெட்டுக்களின் மூலங்களை வெளியிட்டுள்ளார்கள். இதுவரை *20*-க்கும் மேற்பட்ட தொகுதிகள் வெளியாகியுள்ளன. இவைகளும் மீண்டும் அச்சிடப்பட்டு வெளியிடப்படவேண்டும்.

## Epigraphia Indica (எபிகிராபியா இண்டிகா) :

வரலாற்று ஆராய்ச்சி எவ்வாறு அணுகப்பட வேண்டும் என்பதற்கு இந்நூல்களே பெரிதும் துணைபுரிகின்றன. *1890*-லிருந்து *1912* வரை சுமார் *12* தொகுதிகளை வெளியிட்டவர்கள் வெள்ளைக்காரர்களேயாவர். காலக்கணக்கீடு முறைகள் இப்பகுதிகளிலேதான் பெரிதும் கையாளப்பட்டுள்ளன. நம்நாட்டு ஆராய்ச்சியாளர்களும் இந்நூல்களில் கட்டுரைகள் வரைந்துள்ளனர். இந்நூல்களின் பழைய தொகுதிகளை இன்று காண்பது மிகவும் அரிது. ஆகவே, இந்நூல்களையும் மீண்டும் அச்சிட்டு வெளிக்கொணர்தல் வேண்டும்.

## Indian Ephimeris :

"காலக்கணக்கீட்டிற்கு" உதவும் இக்கணித நூல் *1922*-இல் திரு L. D. சுவாமிக்கண்ணுப் பிள்ளை அவர்களால் கணிக்கப்பட்டு அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இன்று இந்நூலை எத்துணை விலை கொடுத்தாலும் பெறுவது அரிது. *50* வருடங்களுக்கு முன் வெளியிடப்பட்ட இந்நூல் எங்காவது இருந்தால் தேடிக் கண்டுபிடிப்பதுகூட மிகவும் கடினம். பழைய புத்தகம் கிடைத்தாலும் அது "அப்பளம் போன்று" பக்கங்கள் ஒடிந்துவிடும் நிலையில் இருக்கும். இந்நிலை இப்படியே நீடித்தால் **"காலக்கணக்கீட்டு அறிவியல் கல்வி"** நம் நாட்டிலிருந்து மறைந்துவிடும். ஆகவே, Indian Ephimeris என்னும் இப்புத்தகம் ஆயிரக்கணக்கில் வெளியிடப்பட்டுக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட வேண்டும். காலக்கணக்கீட்டு முறையை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தலும் அவசியமாகும். சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர்களின்

அரசுக்கட்டில் ஏறிய தொடக்க ஆண்டுகளை நிர்ணயித்தவர்கள் வெள்ளைக்காரர்கள்தான். அவர்கள் இக்கணக்கீடுகளில் "பிற்காலக் கண்டுபிடிப்புக்களால்" மாறுதல் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு என்றும் கூறிச் சென்றுள்ளார்கள். காலக்கணக்கீடு (Astronomical Mathematics) இல்லாத சரித்திர ஆராய்ச்சி உப்பில்லாத உணவுக்குச் சமமாகும். ஆகவே காலக்கணக்கீட்டுப் புத்தகத்தையும் அரசாங்கத்தார் வெளியிடுதல் அவசியமாகும்.

முடிவுரை :

1. தயவுசெய்து பழம்பொருட் சின்னங்களைக் காப்பாற்றுங்கள்.

2. தயவுசெய்து பழைய சாசன அறிக்கைகள், தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதிகள், Epigraphia Indica முதலிய நூல்களைக் காப்பாற்றுங்கள். இப்பழைய நூல்கள் மறைந்துவிட்டால் பிற்காலச் சந்ததியினர் நம் நாட்டின் வரலாற்று உண்மைகளுக்குச் சான்றுகள் கேட்பர் (If we do not preserve these old publications then the future generation will question and challenge the authenticity of the real history of our mother land) ஆகவே இந்நூல்களை அரசாங்கத்தார் மீண்டும் அச்சிட்டு வெளியிடுதல் அவசியம். கல்வெட்டுக்கள் பலவற்றை இழந்தோம்; தொல்பொருட் சின்னங்கள் சிலவற்றையும் இழந்தோம்; ஆனால் இவைகளைப் பற்றி விரிவாக எழுதப் பட்டிருக்கும் பழைய நூல்களையும் இழந்துவிட்டால் – பிற்காலச் சந்ததியினர் நம்மை ஏளனம் செய்வார்கள்; நம் நாட்டைப் பற்றி அறிந்துகொள்ள வெளிநாடுகளில் உள்ள நூலகங்களை நாடும் பரிதாப நிலையை அடைவார்கள். நம் நாட்டின் சாசன அறிக்கைகளையும் வரலாற்று ஆராய்ச்சிகளையும் வெளிநாட்டினர் வாங்கி அவர்களது ஆராய்ச்சிக் கூடங்களில் வைத்துள்ளார்கள். உதாரணமாக 1903-ஆம் ஆண்டு சாசன அறிக்கை பக்கம் 26ஐப் படித்தால், நம்நாட்டுச் சாசன அறிக்கைகள் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற மேலைநாடுகளுக்கும் அனுப்பப்பட்டன என்னும் உண்மையை அறியலாம். மற்றுமோர் உதாரணம்: தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 5-இன் (South Indian Inscriptions) அட்டையின் பின்பக்கத்தில் இவ்வாறு அச்சிடப் பட்டுள்ளது.

> "இப்புத்தகம் லண்டன் ஹைகமிஷனரின் அலுவலகம்,
> 42, Grosvenor's Gardens, London S. W. I -இலும்
> எல்லாக் கிளை அலுவலகங்களிலும் கிடைக்கும்".

இத்தொகுதியில் தமிழ், கன்னடம், தெலுங்குக் கல்வெட்டுக்களின் மூலங்கள் அச்சாகியுள்ளன. இந்நூல் லண்டனில் விற்பனையாயிற்று. ஜப்பானில், சோழர்கால கல்வெட்டுக்களைக் "கம்ப்யூடர் மூலம்" ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்த ஜப்பான் நாட்டு, ஆராய்ச்சியாளர் திரு. கிரோஷிமா அவர்கள் இதனை அறிவித்துள்ளார்கள். (திரு. கிரோஷிமா அவர்கள் தமிழ்ப் புலமையும், கல்வெட்டு ஆராய்ச்சித்திறனும் பெற்றவர்கள். சோழர்களின் வரலாற்று ஆராய்ச்சியில் "சோழர்கால அரசியல்" முறைகளைப் பற்றி ஜப்பானில் அரிய நூல்கள் எழுதியுள்ளார்கள்).

ஆனால், இக்காலத்தில் தமிழகத்தில் "வரலாறு" போதிக்கப்படும் (History as Major Subject) கல்லூரிகளில் எத்தனை இடங்களில், பழைய சாசன அறிக்கைகள் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள், Epigraphia Indica முதலிய நூல்கள் உள்ளன என்ற வினாவை எழுப்பினால், அதற்குரிய விடை **"பல கல்லூரிகளில் இந்நூல்கள் இல்லை"** என்பதையே எதிரொலிக்கும். ஆகையால் இப்பழைய நூல்களை மீண்டும் அச்சிட்டு தமிழகத்திலுள்ள எல்லாக் கல்லூரிகளுக்கும் அனுப்பினால், இக்காலத்து இளம் மாணவ, மாணவியர்கள் புதிய கண்டு பிடிப்புக்களையும், ஆராய்ச்சி நூல்களையும் வெளியிடுவார்கள் என்பது திண்ணம். சந்தர்ப்பமும், சூழ்நிலையும், சாதனங்களும் அளிக்கப்பட்டால் வருங்காலத்தில் அறிவிற் சிறந்த ஆராய்ச்சியாளர்கள் தோன்றுவார்கள் என்பதில் ஐயமில்லை.

---

ஜெமினி அச்சகம், கும்பகோணம். போன் : 835

1. திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை எனக் கொளவும்

2. திருமன்னி வளர விருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன்பெருந் தேவிய ராகி யின்புறவும்

3. திங்களேர் தருதன் றெங்கல்வெண் குடைக்கீழ்
நிலமகள் நிலவ மலர்மகட் புணர்ந்து
செங்கோ லோச்சிக் கருங்கலி கடிந்தும்

4. திருமாது புவியெனும் பெருமாதர்
இவர்தம் மாதேவியர் களாகவும்

5. திருமகள் விளங்க விருநில மடந்தையை
ஒருகுடை நிழற்கீழ் இனிதுறப் புணர்ந்தும்

6. வீரமே துணையாக தியாகமே அணியாக
செங்கோல் ஓச்சிக் கருங்கலி கடிந்தும்

7. திங்களேர் மலர்ந்து வெண்குடை மண்டில
மன்னுயிர் தோறு மின்னருள் சுரந்தும்

8. புகழ்சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியிற்
பொன்னேமி யளவுந் தன்னேமி நடப்பவும்

9. பூமாலை மிடைந்து பொன்மாலை திகழப்
பாமாலை மலிந்த பருமணி திரள் புயத்து
இருநில மடந்தையொடு ஜயமக ளிருப்பவும்

10 பூமன்னு பதுமம் பூத்தவே முலகுந்
தாமுன்செய் தவத்தால் பருதிவழித் தோன்றி
நெடுமா லிவனெனச் சுடர்முடி சூடியும்

11. பூமருவிய திருமாதும் புவிமாதும் செயமாதும்
நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்து புல்க

12. கடல்சூழ்ந்த பார்மாதரும் பூமாதரும் கலைமாதரும்
அடல்சூழ்ந்த போர்மாதரும் சீர்மாதரும் அமர்ந்து வாழ

13. பூமருவிய திசைமுகத்தோன் படைத்த பெரும்புவி விளங்கத்
தேமருவிய பதம்துளவத் திருநெடுமால் இவனென்ன

14. புயல்வாய்த்து மண்வளரப் புலியாணையுஞ் சக்கரமும்
செயல்வாய்த்த மனுநுதலும் செங்கோலும் திசைநடப்பவும்

15. சீர்மன்னி இருநான்கு திசைவிளங்கு திருமடந்தையும்
போர்மன்னு சயமடந்தையும் புவிமடந்தையும் மணம்புணர

ஆதியுகமா மென்னச் சோதிமுடி புனைந்தருளி
அறுசமயமும் ஐம்பூதமும் நெறியில் நின்றுபாரிப்ப
தாயில்லோர்க்குத் தாயாகியும் தந்தையில்லோர்க்குத் தந்தையாகியும்
மைந்தரில்லோர்க்கு மைந்தராகியும் மன்னுயிர்கட்கு இன்உயிராகியும்
கொற்றவையும் திருவும்வாழக் கொடுங்கலிகெட குளிர்வெண்குடைக்
கற்பகாலம் படிகவிப்பக் கதிரவன் குலமுடி சூடி
அருமறைகள் நெறிவாழ அருந்தமிழோர் கிளைவாழப்
பொருவில் மனுநெறிவாழப் பொன்மகுடம் கவித்தருளி
அறம் வளர்த்து அறநெறியிற் ஆட்சிசெய்த
கோவி ராசகேசரி கோப் பரகேசரி பன்மர்கள்
அருளுடைச்சோழ மாமன்னர்கள் நமக் களித்த
பழம் பொருளைக் காத்திடுவோம்
தமிழ்ப் பண்பைக் காட்டிடுவோம்.



முதல் இராசராசனிலிருந்து, அருளுடைச் சோழமண்டலத்தை அரசாட்சி செய்த சோழப் பேரரசர்களின் மெய்க்கீர்த்திகளின் முதல் சில வரிகளும், பின்னும் சில வரிகளும் சேர்க்கப்பட்டு இம்மெய்க்கீர்த்தி மாலை அமைக்கப்பட்டது இம்மெய்க்கீர்த்தி மாலையின் அடியில் காட்சியளிப்பது, முதல் இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேட்டின் இலச்சினை ஆகும். இவ் விலச்சினையின் காலம் கி. பி. 1017 ஆகும். இலச்சினையின் கைப்படம் தந்து உதவிய மத்திய அரசு தொல்பொருள் இலாகாவினருக்கு (மைசூர்) என் நன்றி.

**N. சேதுராமன்**

ஜெமினி அச்சகம், கும்பகோணம். போன் : 835